இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 60 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 22 – திங்கள்கிழமை 09 அக்டோபர் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 60 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 22 - Monday 09 October 2023 - Chennai 10 Pages ₹ 5.00

## போர் : இஸ்ரேலில் தவிக்கும்

# தமிழர்களை பத்திரமாக மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.10.2023) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர் பெ.சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர் கே.கனகராஜ் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் செயல்படுத்தி வரும் மகளிர் நலத் திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு வழங்கினர்.

## அயலகத் தமிழர் நலத்துறை தகவல்!

**சென்னை, அக்.9 -**

**இஸ்ரேலில் தவிக்கும் தமிழர்களை பத்திரமாக மீட்க தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறதென்று தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியம் அறிவித்துள்ளது.**

இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையேயான போர் தீவிரமடைந்துள்ளதால் அங்கு வசித்துவரும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் சொந்த ஊர்களுக்குத் திரும்ப முயன்று வருகின்றனர்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் வசித்து வரும் தமிழர்களும் சொந்த ஊர்களுக்குத் திரும்ப இந்திய அரசையும், மாநில அரசையும் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நல வாரியத்தின் மூலம் தமிழர்களை அங்கிருந்து மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறியதாவது:-

இஸ்ரேலில் இருந்து தங்களை மீட்க வேண்டும் என இதுவரை அயலகத் தமிழர் நல வாரியத்தில் 18 பேர் தொடர்புகொண்டிருக்கிறார்கள். அதில் சென்னை ஆலந்தூரைச் சேர்ந்த 15 பேரும், கோவையைச் சேர்ந்த 3 மாணவர்களும் உள்ளனர். தற்போது 18 பேரும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் தமிழர்கள் அங்கிருந்து வெளியேற விரும்பினால் தமிழ்நாடு அரசு அவர்களை பத்திரமாக அழைத்து வர அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

**பாதுகாப்பாக உள்ளோம் என மாணவர்கள் தகவல்!**

இஸ்ரேல்மீது ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தி உள்ள நிலையில் இஸ்ரேலில் உள்ள இந்தியர்களுக்கு மத்திய அரசின் ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

இஸ்ரேல் வாழ் இந்தியர்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டு உள்ள நிலையில், உதவிகள் தேவைப்பட்டால் 972352 26748 என்ற எண்ணிற்கு அழைக்குமாறு ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலில் வசிக்கும் தமிழ்நாட்டு மாணவர் மணிகண்டன் காணொலியில் அளித்துள்ள பேட்டி வருமாறு:-

நானும் என்னுடன் படிக்கும் தினேஷ் பாபுவும் ஆராய்ச்சி படிப்புக்காக இஸ்ரேல் வந்திருந்தோம். நாங்கள் இருவரும் பென் கொரியன் பல்கலைக்கழகத்தில் இருக்கிறோம்.

இங்கு போர் நடந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம். நாங்கள் தங்கி இருக்கும் இடத்திற்கு அருகே ஹார்பன்ட்ஸ் நகரத்தில் இருந்து எங்களுக்கு தேவையான உதவிகள் செய்து தருவதாக தூதரக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

நாங்கள் பாதுகாப்பாகத்தான் இருக்கிறோம். அரசு முழு உதவிகளையும் செய்கிறது. எங்களுக்கு இமெயில் மூலம் அவ்வப்போது தகுந்த ஆலோசனைகளை தருகிறார்கள். தேவையில்லாமல் வெளியில் செல்ல வேண்டாம் என்று அறிவித்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் உள்ள தமிழர்கள் அயலக தமிழர் நல வாரியத்தை தொடர்பு கொண்டால், தூதரகம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அயலகத் தமிழர் நலத் துறை அறிவித்துள்ளது.

### ஆசிய விளையாட்டுப் போட்டியில்

## 107 பதக்கங்களை அள்ளிய இந்திய அணிக்குப் பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, அக். 9 -**

**ஆசிய விளையாட்டுப் போட்டியில் 107 பதக்கங்களை வென்ற இந்திய அணியை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் பாராட்டு – வாழ்த்துச் செய்தி வருமாறு:-

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட இந்திய அணியினருக்கு எனது பாராட்டுகள்!

107 பதக்கங்களை அள்ளியதன் மூலமாக அபாரமான திறன், உறுதி மற்றும் அர்ப்பணிப்பை நமது விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். தடகள சாம்பியன்கள், கூர்மிகு வில்வித்தையர்கள், சீற்றமிகு கபடி அணியினர், இறகுப் பந்து நட்சத்திரங்கள் என இந்தியாவின் பலதரப்பட்ட திறமையாளர்களும் பெரிதும் இத்தொடரில் மின்னியுள்ளனர்.

குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த நமது வீரர்களுக்குச் சிறப்பு பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். உங்களின் தனிச் சிறப்பான பங்களிப்பால் உலக அரங்கில் நமது மாநிலத்துக்குப் பெருமிதம் பொங்கச் செய்துள்ளீர்கள்.

இத்தகைய சிறப்பான பங்களிப்புடன் நமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். உங்களது முயற்சிகளும் சாதனைகளும் இங்கு இன்னும் பலரை ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்திய அணி, வெகுசிறப்பு!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம்!

### இன்று தொடங்குகிறது

சென்னை, அக். 9–

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இந்த கூட்டத்தொடரில் 2023–24ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் தொடர்பான மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் காவிரி விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சி ஆதரவுடன் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி தமிழ்நாட்டுக்கு நீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வர உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேரவை கூடுவதற்கு முன்பாக அலுவல் ஆய்வுக்குழு கூடி கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது தொடர்பாக முடிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது. மேலும் இந்தக் கூட்டத் தொடர் 3 நாட்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### லடாக் – கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில் தேர்தல்!

## இந்தியா கூட்டணி அமோக வெற்றி!

### பா.ஜ.க. படுதோல்வி!

**லடாக், அக். 9 -**

**லடாக்கின் கார்கில் மலை கவுன்சில் தேர்தல் கடந்த 4 ஆம் தேதி நடைபெற்றது. நேற்று வாக்கு எண்ணப்பட்ட நிலையில், காங்கிரஸ் – தேசிய மாநாட்டு கட்சி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பாஜகவுக்கு கடும் அதிர்ச்சியை தேர்தல் முடிவு கொடுத்துள்ளது.**

ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டு அம்மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்தது. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசமாகவும், லடாக் யூனியன் பிரதேசமாகவும் பிரிக்கப்பட்டன. கடந்த 2019 ஆம் ஆண்டு சிறப்பு அந்தஸ்தை நீக்கி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது இரு யூனியன் பிரதேசங்களும் துணை நிலை ஆளுநரின் நிர்வாகத்தில் உள்ளன.

ஜம்மு காஷ்மீருக்கு சட்டப்பேரவை தேர்தல் இன்னும் நடத்தப்படாமல் உள்ளது. இந்நிலையில், அண்மையில் லடாக்கின் கார்கில் மலை கவுன்சில் தேர்தல் நடைபெற்றது. இந்திய அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணை அந்தந்த மாநிலங்களுக்குள் சுயாட்சி வழங்கப்பட்ட தன்னாட்சி நிர்வாகப் பிரிவுகளை உருவாக்க அனுமதித்துள்ளது. அதன்படி லடாக், மேற்கு வங்காளம், அசாம், மேகாலயா, மிசோரம் மற்றும் திரிபுராவில் சில மாவட்டங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

லடாக்கில் கார்கில் மற்றும் லே மாவட்டத்திற்கு இந்த அதிகாரம் இருக்கிறது. தன்னாட்சி மலையக கவுன்சில்கள் கிராம பஞ்சாயத்துகளுடன் இணைந்து பொருளாதார மேம்பாடு, சுகாதாரம், கல்வி, நில பயன்பாடு, வரி விதிப்பு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் ஆகியவற்றில் முடிவுகளை எடுக்கிறது. கார்கில் மாவட்டத்தை பொறுத்த அளவில் தற்போதுள்ள கவுன்சிலின் பதவிக் காலம் இந்த மாதம் 1ம் தேதியுடன் முடிவடைந்திருக்கிறது. முன்னதாக தேசிய மாநாட்டு கட்சியை சேர்ந்த பெரோஸ் அகமது கான் இந்த கவுன்சிலுக்கு தலைவராக இருந்தார். தற்போது பதவிக்காலம் முடிந்துள்ள நிலையில், தேர்தல் நடைபெற்றது. இந்த மாவட்டத்தில் மொத்தம் 95,388 வாக்காளர்கள் இருக்கின்றனர். மொத்தம் 30 உறுப்பினர்கள் தேர்வு செய்வதற்கான வாக்குப் பதிவு நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

அதன்படி, மொத்தமுள்ள 30 இடங்களில் 26 இடங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தியா கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் கட்சி 22 இடங்களிலும், தேசிய மாநாட்டு கட்சி 17 இடங்களில் போட்டியிட்டது. பா.ஜ.க.வும் 17 இடங்களில் போட்டியிட்டது. இதில், காங்கிரஸ் 16, தேசிய மாநாட்டு கட்சி 5 இடங்களிலும் வெற்றி வாகை சூடியுள்ளது. முடிவுகள் வெளியான 23 இடங்களில் இந்தியா கூட்டணி கட்சி 21 இடங்களை கைப்பற்றியுள்ளது. 17 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்று படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

ஜம்மு, காஷ்மீரில் சட்டமன்ற தேர்தலை நடத்த தாமதம் செய்து வருவதாக இந்தியா கூட்டணி புகார் தெரிவித்து வரும் நிலையில் இந்த லடாக் தன்னாட்சி மலைமேம்பாட்டு கவுன்சில் தேர்தல் முடிவுகள் முக்கியமாக கருதப்படுகிறது. இதனிடையே, இந்த வெற்றியை காஷ்மீரில் காங்கிரஸ் கட்சியினர் கொண்டாடி மகிழ்ந்தனர்.

## இஸ்ரேல் நகரங்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்!

### 1000க்கும் மேற்பட்டோர் பலி!

ரோம், அக். 9 -

இஸ்ரேல் – ஹமாஸ் இயக்கத்தினர் இடையேயான மோதலில் 1000க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், இருதரப்புக்கும் சண்டை மேலும் தீவிரமடைந்துள்ளது.

ஆபரேசன் அல் அக்ஷா என்ற பெயரில் இஸ்ரேல் நகரங்களுக்குள் அதிகாலை நிலம், நீர், வான் வழியாக ஊடுருவி ஹமாஸ் இயக்கத்தினர் தாக்குதலை நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் நகரங்கள் மீது அடுத்தடுத்து சுமார் 5 ஆயிரம் ராக்கெட்டுகளை வீசினர். இந்த திடீர் தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் ராணுவ வீரர்கள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

மேலும் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் ஏராளமானோரை காசாவுக்கு ஹமாஸ் இயக்கத்தினர் சிறைபிடித்து வந்தனர். இந்த தாக்குதலால் பேரதிர்ச்சியடைந்த இஸ்ரேல், ஹமாஸ் இயக்கத்தினர் கட்டுப்பாட்டிலுள்ள காசாவில் 150 இடங்களை குறிவைத்து போர் விமானங்கள் மூலமும், ட்ரோன்கள் மூலமும் பதில் தாக்குதல் நடத்தியது.

இதில் காசாவில் 230க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், ஆயிரத்து 1000க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். ஹமாஸ் இயக்கத்தினர் நரகத்தின் வாசலை திறந்து விட்டுள்ளதாக தெரிவித்துள்ள இஸ்ரேல், காசாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினரின் பதுங்குமிடங்களை முழுவதும் அழிக்க போவதாக கூறி, தாக்குதலை தீவிரபடுத்தியுள்ளது. இதையடுத்து இருதரப்புக்கும் அங்கு சண்டை மேலும் தீவிரமடைந்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் இயக்கத்தினர் இடையேயான மோதல் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அவசரமாக கூடி ஆலோசனை நடத்தியது. மேலும் இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி இஸ்ரேலுக்கு எதிராக எந்த நாடும் செயல்படக்கூடாதென அமெரிக்க அதிபர் ஜோபைடன் எச்சரித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 09-10-2023

# வள்ளலார் சமஸ்கிருதம் போற்றினாரா?

**திங்களுக்கெனச் சொந்தமாகச் சொல்லிக் கொள்ள தத்துவ மேதைகளும் வழிகாட்டிகளும் தலைவர்களும் இல்லாத காரணத்தால் பெருமைக்குரியவர்கள் அனைவரையும் தங்களவர்களாக கபளீகரம் செய்து கொள்வது பா.ஜ.க.வின் இழிசெயல்களில் ஒன்றாகும். அப்படித்தான் திருவள்ளுவர் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் - அண்ணல் அம்பேத்கர் - மாவீரன் பகத்சிங் ஆகியோரை தங்களது வசதிக்கு ஏற்ப திரித்து தங்களவராகக் காட்டி வருகிறார்கள். இந்த வரிசையில் அருட்திரு வள்ளலாரும் அவர்கள் கையில் சிக்கி விட்டார்.**

மதவாத அரசியல் செய்து கொண்டிருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, 'சாதி - சமய வேறுபாடின்றி சன்மார்க்க நெறியில் வாழ்வதுதான் இகத்தில் பரத்தைப் பெறுவதாகும்' என்று சொன்ன வள்ளலார் வழியைப் பற்றிப் பேசலாமா? சாதி மத வேறுபாடின்றி உலகோர் அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை அடைதல்தான் வள்ளலாரின் நோக்கம் ஆகும். மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசினார். ஒளிவடிவில் வழிபடுவதையே வலியுறுத்தினார். செல்வர் - வறியர் பேதம் கூடாது என்றார். ஆண் - பெண் ஆகிய சமத்துவத்தை உறுதிசெய்தார். கணவன் இறந்தால் தாலியை நீக்குவதையே கண்டித்தார். இப்படி அவரது சீர்திருத்தங்கள் பலப்பல. பெண்ணை 'மனுநூல்' இழிவாகச் சொன்னது. அதனை மறுத்து உரிமைப் பெண்ணாக அடையாளப் படுத்தியவர் வள்ளல் பெருமான்.

சடங்குகளையும் - சாத்திர சம்பிரதாயங்களையும் வெறுத்தார். இவை பொய் என்றும், சழக்கு என்றும் கண்டித்தார்.

* **வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்**

**வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்**

**சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை**

**என்ன பயனோ இவை'** - என்று பாடியவர் அவர்.

★ **இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை**

**இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு;**

**மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம**

**வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு;...** (ஆறாம் திருமுறை 33 : 10) - என்று பாடியவர் அவர்.

★ **"சதுர்மறை ஆகம சாத்திர மெல்லாஞ்**

**சந்தைப் படிப்புநஞ் சொந்தப் படிப்போ'** (ஆறாம் திருமுறை 143 : 4) - என்று பாடியவர் அவர். இதனை பிரதமருக்கு கொடுத்து படிக்கச் சொல்லுங்கள்.

'தமிழ் சமஸ்கிருதம் - ஆங்கிலத்தில் இளைஞர்கள் சரளமாகப் பேச வேண்டும் என்று வள்ளலார் விரும்பினார். அதுதான் எங்களின் தேசியக் கொள்கை' என்றும் சொல்லி இருக்கிறார் பிரதமர். மும்மொழிப் பாடசாலையை வள்ளலார் உருவாக்கினார் என்பதை வைத்து இப்படிப் பேசி இருக்கிறார் பிரதமர். சமஸ்கிருதத்தை வள்ளல் பெருமான் ஏற்றுப் போற்றியதைப் போன்ற தோற்றம் கட்டமைக்கப்படுகிறது.

வைதிக கருத்துகளை மட்டுமல்ல, வைதிக மொழியாம் சமஸ்கிருதத்தையும் கடுமையாக விமர்சித்தவர் வள்ளலார் அவர்கள்.

**"இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெரு மறைப்பையும் பொழுது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது பயிலுதற்கு மணிதற்கும் மிகவுமிலே சுடைய தாய்ச் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து, அத் தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்!"** என்றவர் அவர்.

சங்கராச்சாரியார் அவர்கள், "சமசுகிருதமே மாத்ரு பாஷை' (இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி) என்று கூற, சட்டென்று நொடிப்பொழுதில் வள்ளலார், "சமசுகிருதம் மாத்ரு பாஷை என்பது உண்மையெனில், அதற்கு **'எமது தமிழே பித்ரு பாஷை'** (இந்திய மொழிகளிக்கெல்லாம் தந்தை மொழி) என்று பதிலடி தந்தார்.

**"ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்று பற்பல பாஷைகளைப் போலாகாமல் - பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாகவும், ஒலியிலே சாயும் கூட்டென்னும் சக்தி அதி சுலபமாயும் எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தங்களையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண் தன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் ற் ன் என்னும் முடி நடு அடி சிறப்பியலக் கரங்களில் முடிநிலை இன பாநுபவ சுத்த மோனா தீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கையுண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பிய யொலியாம்."** என்று தமிழைப் போற்றியவர் வள்ளலார்.

தமிழ் இன்னும் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி என்றும், தமிழ் மொழியே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும் என்றும் சொன்னவர் வள்ளலார். சமஸ்கிருதத்துக்கு பல்லாயிரம் கோடியும் தமிழ் வளர்ச்சிக்கு சில பத்துக் கோடியும் ஒதுக்கி விட்டு வள்ளலார் வழியில் நடப்பதாக மோடி சொல்வது மோசடி வழி அல்லவா?

'வள்ளலார் காட்டிய வழியில் ஒன்றிய அரசு செயல்படுகிறது' என்று பிரதமர் நரேந்திரமோடி சொல்லியதைப் படித்த பிறகு நெஞ்சு அடைக்கிறது. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில் கொரோனா காலத்தில் வாடினாராம் பிரதமர். அவரே சொல்லிக் கொள்கிறார்.

**லட்சக்கணக்கான மக்களை பல நூறு கிலோ மீட்டர் தூரம் நடக்க வைத்த கொடூரக் காலத்தை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். வடமாநில மக்கள் பட்ட துன்பத்தைத்தான் நாம் பார்த்தோம். நடந்தே போய் மயங்கிச் செத்தது 13 வயதான ஜம்லோ என்ற இளம்பிஞ்சு. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நடந்து போயே இறந்தார்கள். ரயில் வருவது தெரியாமல் ரயில் பாதையில் போய் மரணம் அடைந்தார்கள் மக்கள். இவர்களுக்காக உ.பி.யில் பேருந்துகள் ஏற்பாடு செய்தார் பிரியங்கா காந்தி. அதையும் தடுத்தார் அங்கிருந்த முதலமைச்சர் ஆதித்யநாத். இவர்களது பாதை எது என்பது தான் நமக்குத் தெரியுமே!**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று 8.10.2023 தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் நகர் மற்றும் சிந்தாதிரிபேட்டை திட்டப்பகுதியில் ரூ.75.95 கோடி, மதிப்பீட்டில் 450 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழு தலைவர் மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன், வாரிய தலைமைப் பொறியாளர் வே.சண்முகசுந்தரம், நிர்வாகப் பொறியாளர் ச.சுடலைமுத்து குமார், வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் திட்டப்பகுதியில் ரூ.81.64 கோடி, மதிப்பீட்டில் 448 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., .கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (08.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேம்புலியம்மன் திட்டப்பகுதியில் ரூ.32.62 கோடி, மதிப்பீட்டில் 188 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்திய விமானப் படைக்கு புதிய கொடி!

*புதுடெல்லி, அக்.9-*

*இந்திய விமானப் படைக்கான புதிய கொடியை ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி வெளியிட்டார். ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 8ம் தேதி இந்திய விமானப்படை தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன்படி, 91வது இந்திய விமானப்படை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்நிலையில், விமானப் படை தினத்துக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், 'விமானப் படை தினத்தில் நமது விமானப்படை வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்கள்.*

*சவால்களை எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருக்கும் வலிமையான, தைரியமான மற்றும் ஆற்றல் மிக்க விமானப்படையைக் கொண்டிருப்பதில் தேசம் பெருமிதம் கொள்கிறது. வானத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமின்றி, மனிதாபிமான உதவிகளிலும் முன்னணியில் இருக்கும் நமது எழுச்சியூட்டும் ஹீரோக்களுக்கு தலை வணங்குகிறேன்' என பதிவிட்டுள்ளார். இதேபோல், பிரதமர் மோடி வெளியிட்டுள்ள செய்தியில், 'விமானப்படை தினத்தில் அனைத்து விமான வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்கள்.*

*இந்திய விமானப்படையின் வீரம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றால் இந்தியா பெருமை கொள்கிறது. அவர்களின் சிறந்த சேவை மற்றும் தியாகம் நமது வானம் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்கிறது' என பதிவிட்டுள்ளார். மேலும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும், விமானப்படை தினத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்திய விமானப்படை தின அணிவகுப்பில் பங்கேற்ற விமானப்படையின் ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி, விமானப் படைக்கான புதிய கொடியை வெளியிட்டு, விமானப் படையின் சாதனைகள் குறித்து உரையாற்றினார்.*





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கங்கைகரைபுரம், திட்டப்பகுதியில் ரூ. 29.85 கோடி, மதிப்பீட்டில் புதிய 170 அடுக்குமாடி மற்றும் பத்ரிக்கரை திட்டப்பகுதியில் ரூ.32.30 கோடி, மதிப்பீட்டில் புதிய 168 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், மேயர் ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், சென்னை மாநகராட்சியின் பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.10.2023) நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காந்தி நகர் திட்டப்பகுதியில் ரூ.83.50 கோடி, மதிப்பீட்டில் 500 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, மேலாண்மை இயக்குநர் பொ.சங்கர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடிசைகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை, வாழ்வாதாரத்தை உயர்த்துவதே

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குறிக்கோள்!

## சென்னையில் - வாரியத்தின் புது கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

சென்னை. அக்.9

**சென்னையில் - தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 9 திட்ட பகுதிகளில் ரூ.5560.60 கோடி மதிப்பில் 3238 அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன். பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டி உரையாற்றினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!**

**அப்போது அவர் குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்பதற்காகவே, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியத்தின் பெயரை, 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டு வசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது.

நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார்.

குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

### திருவல்லிக்கேணி தொகுதியில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் நகர் மற்றும் சிந்தாதிரிபேட்டை திட்டப் பகுதியில் 1979 ஆம் ஆண்டு 232 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 392 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 75 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 443 சதுர அடியில் தரை மற்றும் 5 தளங்களுடன் 450 புதிய குடி யிருப்புகளுக்கும்,

### வாழத் தகுதியற்ற குடியிருப்புகள் அகற்றல்

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் திட்டப்பகுதியில் 1975 ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்ட 440 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 81 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 407 சதுர அடியில் தரை மற்றும் 5 தளங்களுடன் 448 புதிய குடியிருப்புகளுக்கும்,

### வில்லிவாக்கத்தில்

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காந்தி நகர் திட்டப்பகுதியில் 1973 ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 496 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தன. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 83 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 417 சதுர அடியில் தரை மற்றும் 4 தளங்களுடன் 500 புதிய குடியிருப்புகளுக்கும்,

### எழும்பூரில்!

எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேம்புலியம்மன் திட்டப்பகுதியில் 1976 ஆம் ஆண்டு 295 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 144 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 32 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 416 சதுர அடியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 188 புதிய குடியிருப்புகளுக்கும்,

### ஆயிரம் விளக்கு தொகுதியில் புதிய குடியிருப்புகள்!

ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பத்ரிக்கரை திட்டப்பகுதியில் 1981 ஆம் ஆண்டு 233 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 144 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 32 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 410 சதுர அடியில் தூண் மற்றும் 6 தளங்களுடன் 168 புதிய குடியிருப்புகளுக்கும், கங்கைகரைபுரம் திட்டப்பகுதியில் 1983 ஆம் ஆண்டு 233 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 176 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 29 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 400 சதுர அடியில் தூண் மற்றும் 6 தளங்களுடன் 2 தொகுப்புகளும் தரை மற்றும் 4 தளங்களுடன் 1 தொகுப்பும் 170 புதிய குடியிருப்புகளுக்கும்,

### மயிலாப்பூரில்

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆண்டிமான்ய திட்டப்பகுதியில் 1975 ஆம் ஆண்டு 224 சதுர அடியில் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்ட 480 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 118 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 433 சதுர அடியில் தூண் மற்றும் 13 தளங்களுடன் 702 புதிய குடியிருப்புகளுக்கும், நாட்டான் தோட்டம் திட்டப்பகுதியில் 1978 ஆம் ஆண்டு 250 சதுர அடியில் தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்ட 250 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 41 கோடியே 08 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 410 சதுர அடியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 252 புதிய குடியிருப்புகளுக்கும் பருவா நகர் திட்டப்பகுதியில் 1992 ஆம் ஆண்டு 180 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 340 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 61 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 433 சதுர அடியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 360 புதிய குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 9 திட்டப்பகுதிகளில் ரூ.556.60 கோடி மதிப்பீட்டில் 3238 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

சர்க்கரைப் பாகு கழிவு மீதான ஜி.எஸ்.டி. வரியைக் குறைப்பதால்

# மாநிலங்களுக்கான வரி வருவாய் குறையும்!

## புதுடெல்லி ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்ப்பு!

புதுடெல்லி, அக்.9 -

சர்க்கரைப் பாகு கழிவு (மொலாஸஸ்) மீதான ஜி.எஸ்.டி. வரிவிகிதத்தை குறைத்தால் மாநிலங்களுக்கான வரி வருவாய் குறையும் எனக் கூறி தமிழ்நாடு நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார்.

டெல்லியில் நடைபெற்ற 52-ஆவது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு வாதங்களை எடுத்துரைத்தார்.

குறிப்பாக, தமிழக மதுபான ஆலைகளுக்குத் தேவையான மொலாஸஸ் என்பது தமிழ்நாடு ஆலைகளிலிருந்து 40 சதவீதம் அளவில் கிடைக்கிறது. இது பெரும்பாலும், உ.பி., மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது. இதற்கு தற்போது 28 சதவீத ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. இதன் மூலம் தமிழ்நாடு அரசுக்கு வரிப் பங்கீடு அதிக அளவில் கிடைக்கும் நிலையில் தற்போது இந்த கவுன்சில் கூட்டத்தில் வரியை குறைக்க முன்மொழியப்பட்டது.

மொலாஸஸ் மீதான ஜி.எஸ்.டி. வரிவிகிதத்தை கணிசமான அளவு குறைத்தால், தமிழ்நாடு போன்ற மாநிலத்திற்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படும். இதற்கு தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவிப்பதாக அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

மேலும் மனித நுகர்வுக்கான மதுபானம் மற்றும் பூச்சு வர்ணம், மருந்து வகைகள் போன்ற தொழிற்சாலைக்கும் பயன்படும் இ.என்.ஏ. என்கிற கூடுதல் நடுநிலை ஆல்கஹாலுக்கு (எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால்) ஜி.எஸ்.டி. மற்றும் மதிப்புக் கூட்டு வரி என இரண்டு விதமான வரி விதிப்பிற்கு கீழ் வைக்கப்பட்டுள்ளதற்கும்



அமைச்சர் தங்கம்தென்னரசு தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து இஎன்ஏ வை பெறுவதால் இரு வரி விதிப்பு முறையினால் நிர்வாக நடைமுறை சிக்கல்கள் உள்ளன. இதில் வருவாயிலும் இழப்பு ஏற்படுகிறது எனத் தெரிவித்தார்.

மேலும், லேபிளுடன் பாக்கெட்டில் வைத்து விற்கப்படும் சிறுதானிய மாவுக்கான ஜி.எஸ்.டி.யை 28 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கும் கவுன்சிலின் முடிவால் மாநிலத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இருப்பினும் சிறு தானிய (மில்லட்) பொருட்களின் நுகர்வை ஊக்குவிக்கும் வகையில் அவற்றின் மீதான வரியை குறைக்கும் கவுன்சிலின் முன்மொழிவை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது என்றார்.

இறுதியாக தமிழக அரசு வேண்டுகோள்படி இஎன்ஏ வை ஜி.எஸ்.டி. வரம்புக்கு அப்பால் வைத்திருப்பது என பரிந்துரைக்கான முடிவை பின்னர் கவுன்சிலில் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்த க்கது.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் வணிகவரித் துறை ஆணையர் தீரஜ் குமார், வணிக வரித் துறை கூடுதல் ஆணையர் ஞானகுமார், வணிக வரித் துறை இணை ஆணையர் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

# கன்னியாகுமரி மீனவர்கள் சென்ற படகு கவிழ்ந்து விபத்து - 3 பேர் மாயம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மூவர் குடும்பத்திற்கும் தலா ரூ. 1 லட்சம் நிதி உதவி!

சென்னை, அக்.9-

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலை சேர்ந்த மீனவர் ஆன்றோ, பயஸ் உள்ளிட்ட 16 பேர், குளச்சல் துறைமுகத்தில் இருந்து கடந்த 25-ஆம் தேதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் ஆழ் கடலில் மீன்பிடித்து கரை திரும்பிய போது, 28 -ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு அருகே படகு கடலில் மூழ்கியது.

இந்த விபத்தில் கொட்டில்பாடு கிராமத்தைச் சேர்ந்த பயஸ், குளச்சல் ஆரோக்கியம், ஆன்றோ ஆகியோர் மாயமாகினார். இந்நிலையில் 29-ஆம் தேதி, கொட்டில்பாடு கிராமத்தை சேர்ந்த பயஸ் உடல் மீட்கப்பட்டது.

இந்நிலையில் மீனவரணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கொட்டில்பாடு கிராமத்தை சேர்ந்த பயஸ், குளச்சல் ஆரோக்கியம், ஆன்றோ ஆகியோரின் குடும்பத்திற்கு சென்று ஆறுதல் தெரிவித்தார்.

மேலும் மீனவரணி சார்பில் ஒவ்வொரு மீனவரின் குடும்பத்திற்கும் ஒரு லட்ச ரூபாய் நிவாரண தொகையையும் வழங்கினார். மேலும் அவர்களின் மகள்களின் பட்ட மேற்படிப்பிற்கான கல்வி செலவு முழுவதையும் ஏற்றுக்கொள்வதாக மீனவரணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உறுதியளித்தார்.

நிகழ்ச்சியில் மீனவரணி மாநில துணைச் செயலாளர் வீ.பி.தென்னரசு மற்றும் நிர்வாகிகள், விசைப்படகு சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

# பல்லவபுரம் தொகுதியில் வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை ! ஜோசப் அண்ணாதுரை பங்கேற்பு!

பல்லவபுரம், அக். 9 -

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகரம் பல்லாவரம் வடக்கு பகுதியில் வட்டங்கள் தோறும் வாக்குச்சாவடிகள் வாரியாக பாகச் செயலாளர்கள் கூட்டம் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றன . அதன்படி நேற்று 8—10-2023 9, 14 ,15 மற்றும் 17 ஆகிய வார்டுக்கு உட்பட்ட வாக்கு சாவடிகளில் பாக செயல்வீரர்கள் கூட்டம் பாக முகவர்கள் தலைமையில் வட்டக்கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது

இக்கூட்டங்களில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளருமான இ. கருணாநிதி கலந்து கொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் பணி ஆற்றுவது 100 வாக்காளர்கள் ஒருவர் என நியமிக்கப்பட்டவர்கள் தேர்தல் காலத்தில் தற்போதைய பணிகளை துவங்குவது குறித்து ஆலோசனை வழங்கினார்

அப்பொழுது பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ. ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதிகள் மாநகரத் துணைச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான,இரா. நரேஷ் கண்ணா, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச. பிரபு, பகுதிக்கு கழக பிரதிநிதிகள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், பகுதி பொருளாளரும் மாமன்ற உறுப்பினருமான எஸ். நெடுஞ்செழியன், வட்டக் கழகச் செயலாளர்கள் டி. எச். பிரான்சஸ், பால், தே. இளங்கோவன், டி. வி .ராஜா, பி. ராஜ்குமார் வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

பஹ்ரைன் நாட்டின் தலைநகர்

# மனாமாவில் தி.மு.க. முப்பெரும் விழா!

## பால்ராஜ் தலைமை! முகமது ஹுசைன் மாலிம் முன்னிலை! கபீர் அகமது - வேம்பு ராஜ் பங்கேற்பு!

மனாமா, (பஹ்ரைன்) அக். 9

பஹ்ரைன் நாட்டின், தலைநகர் மனாமாவில் தி.மு.க.வின் முப்பெரும் விழா. வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் அவைத்தலைவர் பால்ராஜ் தலைமையிலும், பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் முன்னிலையிலும் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது, தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை கருணாநிதி சண்முகம் திறந்து வைத்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை கபீர் அகமது திறந்து வைத்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை சுரேஷ் பூமாலை மற்றும் மன்னை முபாரக் ஆகியோர் திறந்து வைத்து, மாலையிட்டு, மரியாதை செலுத்தினார்கள்.

பேரறிஞர் அண்ணா என்னும் தலைப்பில் குடந்தை ஆரிப், அண்ணாவின் மனித நேயப் பண்புகளைப் பற்றி பேசினார்.

தி.மு.க. என்னும் தலைப்பில் பேசிய தக்கலை சாம், தி.மு.க. வரலாற்றை விரிவாகப் பேசினார்.

பகுத்தறிவுப் பகலவன் என்னும் தலைப்பில் ஆரூர் ஜமால். தந்தை பெரியார் அவர்களின் சாதனைகளையும் தொண்டுகளையும் பட்டியலிட்டுப் பேசினார்.

முப்பெரும் விழா என்ற தலைப்பில் ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் கவிஞர் அப்துல் கையூம் கவிதை வாசித்தார்.

திராவிட இயக்கச் சிந்தனையாளர் மற்றும் பேச்சாளர் வல்லம் பசீர் பேசுகையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவம் பற்றியும், இந்தியாவின் எதிர்காலத்தை காப்பாற்ற தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றியும் விரிவாகப் பேசினார்.

தலைமை உரையாற்றிய பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ராஜபாண்டியன் மற்றும் பொருளாளர் பைசல்,

ம.தி.மு.க சார்பில் மூர்த்தி. முஸ்லிம் லீக் சார்பில் சுலைமான். த. மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி ஆகியோர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த, முப்பெரும் விழாவில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டு, தலைவர்களின் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்..

மன்னை செல்வா வரவேற்புரை வழங்க, துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, மேலப்பூந்தை இஸ்மாயில் நன்றி கூறினார்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் வாக்குச்சாவடி நிலை முகவர் மற்றும் பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம். எல். ஏ. கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், ஒன்றியச் செயலாளர் பி.எச்.சத்தியசாய், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

# உலகக்கோப்பை கிரிக்கெட்: ஆஸ்திரேலியாவை வீழ்த்தி - இந்திய அணி அபார வெற்றி!

சென்னை, அக்.9

சென்னையில் நடைபெற்ற உலக கோப்பை கிரிக்கெட் லீக் ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது.

50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் மோதின.

இதில், டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் கம்மின்ஸ் பேட்டிங்கை தேர்வு செய்தார். இதனையடுத்து களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன.

ஆஸ்திரேலிய அணி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 199 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணியில் ஜடேஜா 3 விக்கெட்டுகளையும் பும்ரா மற்றும் குல்தீப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 200 ரன்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பேட்டிங்கைத் தொடங்கியது இந்திய அணி.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மாவும், இஷான் கிஷனும் ரன் ஏதுமின்றி அவுட்டாகி வெளியேறினர். எனினும் 4வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த விராட் கோலி கே.எல்.ராகுல் ஜோடி இந்திய அணியை சரிவில் இருந்து மீட்டது.

நிதானமாக விளையாடிய இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் அணியின் ஸ்கோர் உயரத்தொடங்கியது. கே.எல்.ராகுல் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 97 ரன்கள் குவித்தார். இறுதியில் 41.2 ஓவரில் இந்திய அணி வெற்றி இலக்கை எட்டியது.

ஆஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!






கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளியில் பட்டாசு கடை விபத்தில் பலியானவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அர சக்கரபாணி நேரில் சென்று ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினர். உடன் மாவட்டச் செயலாளர் ஒய் .பிரகாஷ் எம்.எல்.ஏ., மேயர் சத்யா உடன் இருந்தனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா: மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு . தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை! கே.எஸ்.எம்.நாதன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்டம் - எழும்பூர் தெற்குப் பகுதி சார்பில் மாபெரும் வாழ்த்தரங்கம்!

## நடிகர் ராஜ்கிரண், நடிகர் பாண்டியராஜன், நடிகை ரோகிணி சிறப்புரை!

சென்னை, அக். 9 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி சார்பில்கலைஞர்100, 44வது நிகழ்ச்சியாக "நட்சத்திரங்களின் சந்திரன் தமிழ் திரைவானின் சூரியன்" எனும் தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் 11.10.2023 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில், சென்னை, எழும்பூர், வீராசாமி தெருவில் நடைபெறுகிறது.

இவ்வாழ்த்தரங்கில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு,கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., வி.சுதாகர், சொ.வேலு எம்.சி., கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு, ராஜேஸ்வரி ஸ்ரீதர் அ.நிர்மலாதேவி, எல்.சுந்தர் ராஜன்., பரிதிஇளம்சுருதி., பாஃத்திமா முசாஃபர் முன்னிலை வகிக்கின்றனர்.

தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர். பாபு(எ) சந்திரசேகரன், இ.மொய்தீன், வான்மதிகதிரவன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்வாழ்த்தரங்கில் நடிகர்.ராஜ்கிரண், நடிகர். பாண்டியராஜன், நடிகை ரோகிணி ஆகியோர் போற்றிப் பேசுகின்றனர்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், எம்.எல்.ஏ.க்கள் இ.பரந்தாமன் , ப.தாயகம்கவி , ஜோசப்சாமுவேல், அ.வெற்றிஅழகன் மற்றும் ஓ.ஏ.நாகலிங்கம் கே.எஸ்.இரவிச்சந்திரன் , சங்கரிநாராயணன் , ப.ரங்கநாதன், எஸ்.மணிமுடி, தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, வே. உமாகாந்த், சி.மகேஷ்குமார் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

61வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.டால்பின் ஹரி நன்றி கூறுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி -

# பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் நிர்வாகிகள் - உள்ளாட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

காஞ்சிபுரம், அக்.9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (9.10.2023 திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் வண்டலூர் கேளம்பாக்கம் நெடுஞ்சாலையில் கொளப்பாக்கத்தில் அமைந்துள்ள பாலாஜி திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும்,

மாவட்ட மகளிர் அணி தலைவர் கே.சி.சந்தியா, துணை தலைவர் த.மலர்விழி, துணை அமைப்பாளர்கள் மீரா சபாபதி, சி.எம். கலைவாணி, பி.விஜயலட்சுமி, பி.வளர்மதி, வெ. பாண்டிசெல்வி, வி.சரளா, எஸ். தமிழரசி, எஸ்.சத்தியா மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் லட்சுமி ஞானசேகர்,

துணை தலைவர் க.சாந்தி, துணை அமைப்பாளர்கள் எம்.கலாவதி, கல்யாணி மண்ராஜன், விஜய லட்சுமி ரமேஷ், ஜி.வெற்றிசெல்வி, த.செண்பகவள்ளி, எஸ்.சந்தியா, எஸ்.நளினிபிரியா ஆகியோர் முன்னிலை யிலும் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பெண் பிரதிநிதிகள், கழக பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொருள் : 1. வருகிற 14.10.2023 சனிக்கிழமை அன்று சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறவுள்ள கழக மகளிர் உரிமை மாநாட்டில் பங்கேற்பது குறித்து. 2. கழக மகளிர் அணி வளர்ச்சி.

இவ்வாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி - மாவட்ட அமைப்பாளர் உதயா கருணாகரன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி - மாவட்ட அமைப்பாளர் ச. சசிகலா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - சாலவாக்கம் ஒன்றியக் கழகக் கூட்டம்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி- டி.குமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக். 9 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் பாக நிலை முகவர்கள் பாக நிலை குழு உறுப்பினர்கள் கூட்டம் நேற்று (8.10.2023) பொற்பந்தல் சமுதாய அரங்கில் ஒன்றிய அவைத் தலைவர் என்.எஸ்.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் வி.ஞானசேகர், டி.தமிழ் வேந்தன், ஜெ.சுஜாதா, ஒன்றிய பொருளாளர் பி.வெ. பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், பாபுஷரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் சிறப்புரையாற்றினார்.

மேலும் மாவட்ட துணைச் செயலாளர் க. செல்வம் எம்.பி. உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், கழக முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

நவம்பர் 27ல் பிறந்த நாள் காணும் கழக மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களின் பிறந்த நாளை நமது ஒன்றியத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அந்தந்த பகுதியில் இனிப்புகள், அறுசுவை வழங்கி ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

டிசம்பர் 17 கழக இளைஞரணி மாநில இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது இந்த மாநாட்டிற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வினுடைய ஆலோசனையின் பேரில் நமது ஒன்றியத்தில் இளைஞர்களின் நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும்,

பாகநிலை முகவர்கள் (BLA) நிலைக்குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் அந்தந்த பகுதியில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் முன்னிட்டு நமது திராவிட மாடல் ஆட்சியில் சாதனைகளையும் எடுத்துரைத்து மாவட்ட கழக செயலாளர் உத்தரவிடுகின்ற தேர்தல் பணிகளையும் சிறப்பாக செய்திடுமாறு நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் ஒன்றியத்திற்கு நடைமுறைப்படுத்துவது.

இளைஞரணி மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கையை அதிக அளவில் சேர்த்து விரைந்து முடித்தும் நமது ஒன்றியத்திற்கு பெருமை சேர்ப்பது,

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சேர்த்தல் நீக்கல் 27.10.2023 முதல் புதிய வாக்காளர் சேர்க்கவும் நீக்கவும் திருத்தம் செய்யவும் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது இது தவிர 4.11.2023. 5.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய நான்கு நாட்களில் சிறப்பு முகாம்கள் அந்தந்த வாக்குச்சாவடிகள் நடைபெற உள்ளது இதனை கழக நிர்வாகிகள் புதிய வாக்காளர்களை சேர்க்கவும், திருத்தம் செய்து பயன்படுத்திக் கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டது.

# கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் காணொலிக் கூட்டம்!

## அணிச் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர் ஒருங்கிணைப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று (9.10.2023 - திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற இருக்கிறது.

அனைவரும் தவறாமல் அந்தந்த மாவட்ட/தொகுதி அலுவலகங்களில் காணொலி வாயிலாகக் கலந்து கொள்ள வேண்டுகிறோம். மேலும் அனைத்து மாநில துணைச் செயலாளர்களும் தங்களது மாவட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

பொருள்:

1.அணி நிர்வாகிகள் தன்னார்வலர்கள் அறிமுகக் கூட்டம்.

2. கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
**செயலாளர்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ. வீராசாமி

### அக்டோபர் 9 (2020)



தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

நாகை நகர வீடு கட்டுவார் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கலைஞர்நகர் தெற்கு பகுதி

# 136-வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை, அக்.9

கலைஞர் நகர் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலைஞர் நகர் தெற்குப் பகுதி, 136-வது வட்ட பாக முகவர்கள் கூட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி தி.மு.க. அலுவலகத்தில், 12.10.2023 மாலை 6 மணியளவில் வட்டச் செயலாளர் பூக்கடை ஆர்.பழனிச்சாமி தலைமையில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, கணக்கு நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், தொகுதிப் பொறுப்பாளர் கன்னிகை ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மாவட்ட துணைச் செயலாளர் வாசுகிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ். முருகேசன், பகுதி நிர்வாகிகள் கலந்துகொள்ள உள்ள இக்கூட்டத்தில் 136-வது வட்டத்திற்குட்பட்ட பாக தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை யொட்டி, வரும் நாடாளுமன்றத் தேர்தல் சம்மந்தமாக.

இவ்வாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூர் 9-வது வட்டக் கழகச் செயலாளர்

# எம்.எல்.சரவணன் மகள் கீர்த்தனா மறைவு!

## தி.மு.தனியரசு - கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, அக். 9 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 9வது வட்ட கழக செயலாளர் எம்.எல்.சரவணன் மற்றும் 9வது வட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி உமா சரவணன் ஆகியோரின் மகள் திருமதி. எஸ். கீர்த்தனா நேற்று (8.10.2023) இரவு 1 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது இறுதி ஊர்வலம் நேற்று (8.10.2023 மாலை 5 மணிக்கு கணக்கர் தெரு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு திருவொற்றியூர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல் அறிந்து, திருவொற்றியூர் பகுதிக் கழகச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான தி.மு. தனியரசு மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி

### அக்டோபர் 9 (1992)



திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆண்டிமான்ய தோட்டம் திட்டப்பகுதியில் ரூ. 118.53 கோடி, மதிப்பீட்டில் புதிய 702 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், பருவாநகர் திட்டப்பகுதியில் ரூ.61.13 கோடி, மதிப்பீட்டில் புதிய 360 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், நாட்டான் தோட்டம் ரூ. 41.08 கோடி, மதிப்பீட்டில் புதிய 252 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்.த.வேலு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளி, பட்டாசு கடையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை அமைச்சர்கள் அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர்கள்ஒய்.பிரகாஷ் (ஓசூர்), டி.ராமச்சந்திரன் (தளி), அரூர் சட்டமன்ற உறுப்பினர்சம்பத்குமார், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, ஓசூர் சார் ஆட்சியர் திருமதி.ஆர்.சரண்யா ஆகியோர் உள்ளனர்.

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் - ரூ 556.60 கோடி மதிப்பீட்டில்

# 3238 குடியிருப்புகளின் கட்டுமானப் பணி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு முன்னிலை!

சென்னை, அக்.9-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 9 திட்டப்பகுதிகளில் ரூ.556.60 கோடி மதிப்பீட்டில் 3238 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நாவலர் நெடுஞ்செழியன் நகர் மற்றும் சிந்தாதிரிப்பேட்டை திட்டப்பகுதியில் ரூ75.95 கோடி மதிப்பீட்டில் 450 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும்,

பெரியார் நகர் திட்டப்பகுதியில் ரூ.81.64 கோடி மதிப்பீட்டில் 448 புதிய குடியிருப்புகளுக்கும் காந்தி நகர் திட்டப்பகுதியில் ரூ.83.50 கோடி மதிப்பீட்டில் 500 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், வேம்புலியம்மன் திட்டப்பகுதியில் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் 188 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், பத்ரிக்கரை திட்டப்பகுதியில் ரூ.32.30 கோடி மதிப்பீட்டில் 168 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும்,

கங்கைக்கரைபுரம் திட்டப்பகுதியில் ரூ.29.85 கோடி மதிப்பீட்டில் 170 புதிய அடுக்குமாடி குடியிருப்பு களுக்கும், ஆண்டிமான்ய தோட்டம் திட்டப்பகுதியில் ரூ118.53 கோடி மதிப்பீட்டில் 702 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், நாட்டான் தோட்டம் திட்டப் பகுதியில் ரூ.41.08 கோடி மதிப்பீட்டில் 252 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், மற்றும் பருவா நகர் திட்டப்பகுதியில் ரூ.61.13 கோடி மதிப்பீட்டில் 360 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும், ஆக மொத்தம் 9 திட்டப்பகுதிகளில் ரூ.556.60 கோடி மதிப்பீட்டில் 3238 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட இடியும் தருவாயில் உள்ள பழைய குடியிருப்புகளை கணக்கெடுக்கும்படி உத்தரவிட்டார்கள். அதன்படி சென்னையில் 27,138 வீடுகளும் மற்றும் பிற மாவட்டங்களில் 3,354 வீடுகளும் மொத்தம் 30,492 பழைய வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டது. 20212022 மற்றும் 20222023 நிதியாண்டுகளில் ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 15000 புதிய வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி 30 திட்டப் பகுதிகளில் 7582 வீடுகள் இடிக்கப்பட்டு ரூ.1627.97 கோடி மதிப்பீட்டில் 9,522 வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இதில் 12 திட்டப்பகுதிகளில் ரூ. 773.83 கோடி மதிப்பீட்டில் 4486 புதிய குடியிருப்புகள் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் 9 திட்டப் பகுதிகளில் ரூ.556.60 கோடி மதிப்பீட்டில் 3238 புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மொத்தம் 21 திட்டப்பகுதிகளில் ரூ.1330.43 கோடி மதிப்பீட்டில் 7724 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 9 திட்டப்பகுதிகளில் 297.45 கோடி மதிப்பீட்டில் 1798 குடியிருப்புகளுக்கு விரைவில் அடிக்கல் நாட்டப்பட உள்ளது.

கட்டப்படவுள்ள புதிய குடியிருப்புகளில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமையவுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களிலும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளும் அமைக்கப்படவுள்ளது. 18 மாதத்தில் பணிகள் நிறைவு செய்து குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும். இங்கு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற்கனவே இருந்த குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. சிவகுமார் (எ) தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், இ.பரந்தாமன், நா.எழிலன், த. வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சிற்றரசு, மண்டல குழு தலைவர்கள் மதன் மோகன், திருமதி.சரிதா மகேஷ்குமார், கே.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகதீசன், அம்பேத்வளவன் (எ) குமாரசாமி, திருமதி.எஸ்.தனலட்சுமி, திருமதி.பிரேமா சுரேஷ், திருமதி.அமிர்தவர்சினி, திருமதி.விமலா கிருஷ்ணமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முக சுந்தரம், வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் - அத்திப்பள்ளி பட்டாசுக் கடையில் வெடி விபத்து: உயிரிழந்த

# 14 பேரின் உடல்களுக்கு - அமைச்சர்கள் அர.சக்கரபாணி - மா.சுப்பிரமணியன் அஞ்சலி!

## இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி வழங்கி ஆறுதல் கூறினர்!

ஒசூர், அக்.9

கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளி பட்டாசு கடையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த 14 நபர்களின் உடல்களுக்கு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பட்டாசு கடையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகள் மற்றும் கடும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இரண்டு நபர்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதம் காசோலைகளை நேற்று (08.10.2023) வழங்கி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

அதன் விபரம் வருமாறு:-

கர்நாடகா மாநிலம், பெங்களூர் புற நகர் மாவட்டம், ஆனைக்கல் தாலுக்கா அத்திப்பள்ளி பட்டாசு குடோன் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும், காயமடைந்து பெங்களூர் செண்ட் ஜான்ஸ் மருத்துவமனை மற்றும் விக்டோரியா மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற்று வருபவர்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (08.10.2023) நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளையும், கடும் காயமடைந்த 2 நபர்களுக்கு தலா ரூ. 1 இலட்சத்திற்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஓசூர்), டி. ராமச்சந்திரன் (தளி), அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத்குமார், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரோஜ்குமார் தாகூர் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு - கர்நாடக மாநில எல்லையில், கர்நாடகா மாநிலம், பெங்களூர் புறநகர் மாவட்டம், ஆனைக்கல் தாலுக்கா அத்திப்பள்ளி பட்டாசு குடோனில் 07.10.2023 அன்று எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. இதில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்டத்தைச் சேர்ந்த 14 நபர்கள் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 2 நபர்களுக்கு பெங்களூர் செண்ட் ஜான்ஸ் மருத்துவமனை மற்றும் விக்டோரியா மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்போது அவர்களின் நிலைமை சீராக உள்ளது.

இந்த துயரச் செய்தியினை அறிந்த முதலமைச்சர் அவர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்த நேற்று இரவு ஆணையிட்டார்கள். தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை மேற்கொள்ளவும், மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களை தமிழ்நாட்டுக்கு கொண்டுவரவும் உரிய ஏற்பாடுகள் செய்ய உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் மற்றும், சுகாரதாரத்துறை ஆகியோர் கர்நாடக அரசின் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு பட்டாசு வெடி விபத்தில் இறந்த 14 நபர்களின் உடல்கள் அத்திப்பள்ளி ஆக்ஸ்போர்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உடற் கூராய்வு மேற்கொண்டு உறவினர்களிடம் உடல்கள் இன்று ஒப்படைக்கப்பட்டது. இறந்த 14 நபர்களின் உடல்கள் அவர்களின் சொந்த ஊர்களுக்கு கொண்டு செல்ல இலவச அமரர் ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் இறந்தவர்களின் உறவினர்கள் அவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்லவும் அரசு போக்குவரத் துறை சார்பாக பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்குச் சிறப்பு சிகிச்சையும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சமும், கடும் காயமடைந்தவர்களுக்கு ரூ.1 இலட்சமும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், இவ்விபத்தில் உயிரிழந்த தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வேட்டப்பன், ஆதிகேசவன், விஜயராகவன், இளம்பருதி, ஆகாஷ், கிரி, சச்சின் ஆகிய 7 நபர்கள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த பிரபாகரன், வசந்தராஜ், அப்பாஸ் ஆகிய 3 நபர்கள்; திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த நிதிஸ், சந்தோஷ் ஆகிய 2 நபர்கள் திருவண்ணாமலை மாவட்டம் நீப்பத்துறை சார்ந்த பிரகாஷ், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரைச் சேர்ந்த அந்தோணிபவுல் ராஜ் என உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்தினரிடம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் வீதம் என ரூ.42 இலட்சத்திற்கான காசோலைகள் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விபத்தில் கடும் காயமடைந்து பெங்களூர் செண்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வரும் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜேஸ் என்பவருக்கும், விக்டோரியா மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் தினேஷ் என்பவருக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா

ரூ. 1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 2 இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் காயமடைந்தவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க மருத்துவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் பட்டாசு கடை வெடிவிபத்து நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டு உரிய விசாரணை மேற்கொள்ள காவல்துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டனர்.

இந்நிகழ்வில், ஒசூர் சார் ஆட்சியர் திருமதி ஆர். சரண்யா, கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பூவதி, இணை இயக்குனர் (நலப்பணிகள்) பரமசிவம், துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு.ரமேஷ் குமார், ஒசூர் துணை காவல் கண்காணிப்பாளர் பாபுபிரசாத், ஒசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தையா, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் சுப்பிரமணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

இன்று மாலை கொளப்பாக்கத்தில் நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (9.10.2023 திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் வண்டலூர் கேளம்பாக்கம் நெடுஞ்சலையில் அமைந்துள்ள கொளப்பாக்கம் பாலாஜி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. வருகிற அக்டோபர் 14 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெறவுள்ள மகளிர் உரிமை மாநாட்டில் மகளிர் பங்கேற்பது குறித்து 2.கூட்டுறவு சங்கத் தேர்தல் குறித்து, 3.நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள் 4. கழக வளர்ச்சி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்,**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

மாநில கழக இலக்கிய அணி முன்னாள் துணைச் செயலாளர்

# ஆரணி கோ.வெற்றிவீரன் நான்காமாண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், அக். 9 -

மாநில இலக்கிய அணி முன்னாள் துணைச் செயலாளர் ஆரணி கோ. வெள்ளிவீரனின் 4 ஆம் ஆண்டு நினைவு நாளை இன்று (09.10.2023) கடைப்பிடிக்கப்படுகிறது.

1954-ல் ஆரணி பேரூரில் கழகம் துவங்கப்பட்ட போது கோ.வெற்றிவீரன், தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற துவங்கி, ஒன்று பட்ட செங்கல்பட்டு மாவட்டம் வரை கழகம் வளர்த்தவராவார்.

மாவட்டப் பிரதிநிதி, ஆரணி பேரூர் கழகத்தின் பொறுப்பாளர், பொதுக் குழுஉறுப்பினர்,தலைமைக்



கழக சொற்பொழிவாளர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புக்கள் வகித்தவர்.

"இளமை காலம் முதல் திராவிடக்முன்னேற்றக்கழகத்தின் பற்றாளராகத் திகழும் கோ.வெற்றிவீரன் ஆற்றல் மிக்க எழுத்தாளர்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர்.

பேரறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர், இனமானப்பேராசிரியர்,முரசொலி மாறன், கழகத்தலைவர்தளபதி போன்ற ஆளுமைகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

இவர் இயற்றி நடித்த வரலாற்று நாடகங்கள் பல்லவன்பாவை,இதயத்தில்ஆடியவள்,திருந்திய உள்ளம், ஹரே ராமா ஹரே கிருஷ்ணா போன்றவைகள் குறிப்பிடத்த க்கவை.

இவை அனைத்தும் சென்னை வானொலியில் ஒலிபரப்பப் பட்டவை, மேலும் 'ஒன்று நமது சிந்தனை' என்ற தலைப்பில் வானொலியில்உரையாடியிருக்கிறார்.

1977ஆம் ஆண்டு பொன்னேரிதனி தொகுதிக்கு கழக வேட்பாளராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாய்ப்பளித்தார்.

இவரின்நூல்கள்:அலைத் தமிழே ! ஆலவிழுது. பேரறிஞர்அண்ணாவின்'நம்நாடு' இதழில்துணை ஆசிரியராக பணியாற்றி,தொடர்ந்துமுரசொலியில் நூற்று க்கணக்கான கட்டுரைகள் எழுதியவர். பிறகு பொற்காலம் இதழில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

கழக அமைப்பு தேர்தல் நடைபெறும் போது தலைமைக்கழகஆணையாளராக தமிழ் நாடு, பாண்டிச்சேரி இருமாநிலமுழுவதும்வலம் வந்தவர்.

கருப்புக்கொடிபோராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு,இலங்கைத்தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்துபோராட்டங்களிலும் கலந்து கொண்டு 22 முறை சிறை சென்றவர்.

9.10.2019-ல் மறைந்த தலைமை இலக்கிய அணி முன்னாள்துணைச்செயலாளர் கோவெற்றிவீரன் அவர்களின் நான்காமாண்டு நினைவு நாள் அன்னாரது இல்லத்தில் இன்று (9.10.2023) கடைப்பிடிக்கப் படுகிறது.

இதில்கழகத்தினர்ஏராளமானோர் பங்கேற்று அன்னாரது படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் லத்தூர் வடக்கு ஒன்றியம் வாக்குச்சாவடி நிலை முகவர் மற்றும் பாகமுகர் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம். எல். ஏ. கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்றத் தொகுதி தலைமை கழக பார்வையாளர் கே. ஜி. பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய செயலாளர் கே. எஸ். ராமச்சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.கே.ராஜேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்



பஹ்ரைன் நாட்டில், வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற, முப்பெரும் விழா நிகழ்ச்சியில் அக்பர் அலி, அசோக் குமார், ஆபீத் அலி, ரங்கராஜ், மணிவண்ணன், சதீஷ் குமார், ஸ்ரீதர், சிவா, முபாரக் அலி, காளிதாஸ், சரபுதீன், சேகர், பெருவை பிரபா, முகமது அக்கிம், சோலை திருமேனி, பக்ருதீன் அலியார், மேரி ஜார்ஜ், மாலிக், ஆழியூர் சாகுல், மஸ்தான், இப்ராஹிம், தமிழரசு, மொய்தீன், இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் த.வினோத் குமார் தலைமையில் நடைபெற்ற பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான மாபெரும் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசுகள் வழங்கி உரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், து. மூர்த்தி, நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் நரேந்திரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### குன்றத்தூர் ஊராட்சி பகுதிகளில்

# மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி!

## மாவட்ட ஆட்சியர் ஆய்வு!

காஞ்சிபுரம், அக்.9-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட் கொளப்பாக்கம், கெருகம்பாக்கம் மற்றும் கொளப்பாக்கம் - பொழிச்சலூர் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணியினை 05.10.2023 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளப்பாக்கம் பகுதியில் மூடு கால்வாய் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்ட்டு, கெருகம்பாக்கம் பகுதியில் மழைநீர் வடிகால் கால்வாய் பணியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்ட பின்பு கொளப்பாக்கம் - பொழிச்சலூர் சாலையின், ஒமேகா பள்ளி அருகில், மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

### கலைஞர் நூற்றாண்டு விழா!

# கடலூர் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பேச்சுப்போட்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுகள்,சான்றிதழ்கள் வழங்கினார்!

கடலூர், அக். 9 -

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணிசார்பில் நடத்தியபொறியியல்மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப் போட்டி நடைபெற்றது.

அரசு மற்றும் தனியார் கல்லூரிகளின் , 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். என்.எல்.சி., தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், துணை அமைப்பாளர்கள் கலைச்செல்வன்,பாண்டுரங்கன்,ராம்சிங்ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் சி.வெ. கணேசன்தலைமைதாங்கிபேச்சுப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் ஊக்கத் தொகை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைச்செயற்குழுஉறுப்பினர்ராசவன்னியன்,எழுத்தாளர் இமயம்,நெய்வேலி நகரச் செயலாளர் பக்கிரிசாமி,மாவட்டப்பொருளாளர்தண்டபாணி,தொ.மு.ச. பொதுச்செயலாளர் பாரி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் புகழேந்தி, தொ.மு.ச. தலைவர் திருமாவளவன், பொருளாளர் ஐயப்பன்,மாவட்டதுணைச் செயலாளர் ஆனந்தி சரவணன், ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால், தொமுசமுன்னாள்தலைவர்கள் வீரராமச்சந்திரன், சிவந்தான்செட்டி, மாவட்டபிரதிநிதிகள் ரவிச்சந்திரன், நாசர், மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்ராஜேஷ், சதாம்,முன்னாள்தொ.மு.ச. பொருளாளர் குருநாதன், மற்றும்பலர்கலந்து கொண்டனர்.

நிறைவாக நிரஞ்சன் நன்றி கூறினார்.

### இன்று நடைபெறுகிறது

# கலைஞர் நகர் தெற்குப் பகுதி - வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச்செயலாளர் கே.கண்ணன் எம்.சி. அறிக்கை!

சென்னை, அக்.9-

கலைஞர் நகர் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியா கூட்டணி சார்பில் வரும் அக்டோபர் 14-ஆம் தேதி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற உள்ள மகளிர் மாநாட்டையொட்டி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (09.10.2023, திங்கள்கிழமை) மாலை 6 மணியளவில் கலைஞர் நகர் தெற்குப் பகுதி தி.மு.க. அலுவலகத்தில், வட்ட செயலாளர்கள் கூட்டம், அவைத்தலைவர் எஸ். உமாபதி தலைமையில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர், கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசேகரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ. துரைராஜ், பி.எஸ். முருகேசன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டச் செயலாளர்கள், மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

அக்டோபர் 14-ம் தேதி ஒய்.எம்.சி.ஏ.வில் நடக்க உள்ள மகளிரணி மாநாட்டில், கலைஞர் நகர் தெற்குப் பகுதியிலிருந்து ஏராளமான மகளிர் கலந்து கொள்வது சம்பந்தமாக.

இவ்வாறு பகுதிச்செயலாளர் கே.கண்ணன் எம்.சி. தெரிவித்துள்ளார்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வடக்கு பகுதியில் வட்டங்கள் தோறும் வாக்குச்சாவடிகள் வாரியாக பாக முகவர்கள் கூட்டம் 9, 14 ,15 மற்றும் 17 வது வார்டுக்கு உட்பட்ட வாக்கு சாவடிகளில் பாக முகவர்கள் கூட்டம் வட்டக்கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டங்களில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளருமான இ.கருணாநிதி கலந்துகொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் பணி ஆற்றுவது என்றும் 100 வாக்காளர்கள் ஒருவர் என நியமிக்கப்பட்டவர்கள் தேர்தல் காலத்தில் தற்போதைய பணிகளை துவங்குவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கினார். இதில் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதிகள் இரா. நரேஷ் கண்ணா, ச.பிரபு, கோ. ஜானகிராமன் எஸ். நெடுஞ்செழியன், டி.எச். பிரான்சஸ்பால், தே. இளங்கோவன், டி.வி .ராஜா, பி. ராஜ்குமார் , வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




### எஸ்.மோகன் - மன்னை நா.சோழராஜன் - பூர்ண சங்கீதா - சின்னமுத்து பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி நேர்காணல்!

## வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி பகுதி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் கழக மாணவரணி துணை செயலாளர் எஸ்.மோகன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், பகுதி செயலாளர்கள் இரா.இலட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில் குமார், அ. முருகன், க.ஜெயராமன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு. சத்யநாராயணன் ஆகியோர் முன்னிலையிலும் மாணவரணி மாநில நிர்வாகிகள் நா.சோழராஜன், பூர்ண சங்கீதா, சின்னமுத்து ஆகியோர் நேர்காணல் நடத்த உள்ளனர்.

ஏற்கனவே கழக மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கும் விண்ணப்பம் அளித்தவர்களும் நேரடியாக கலந்து கொள்ள விருப்பப்படுபவர்களும் தண்டையார்பேட்டை 478 டி எச் ரோடு விலாசத்தில் இன்று (9.10.2023) காலை 9 மணி அளவில் நடைபெறும் நேர்காணலில் கலந்து கொள்ள அழைக்கப் படுகின்றனர்.

மேலும் நடைபெறும் நிகழ்ச்சிக்கு சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**தா.இளைய அருணா**
செயலாளர்
சென்னை வடக்கு மாவட்ட திமுக.

### வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தலைமை!

திண்டுக்கல், அக். 9 -

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் வாக்குசாவடி முகவர்கள் ஆலோசகர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வேடசந்தூர் சட்டமன்றஉறுப்பினர்காந்திராஜன் தலைமை வகித்தார்.

நாடாளுமன்றத்தேர்தல் வேடசந்தூர் தொகுதி பொறுப்பாளர்நாச்சிமுத்து, முன்னிலைவகித்தார். வேடசந்தூர்வடக்குஒன்றியசெயலாளர் கவிதா பார்த்திபன் எரியோடுபேரூராட்சிதலைவர்முத்துலட்சுமி,பண்ணை கார்த்திக், எரியோடு பேரூர் செயலாளர் சின்னா என்ற செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத்தில் இளைஞர் அணி உறுப்பினரை அதிக அளவில்சேர்த்தல்,இளைஞரணிமாநாட்டுஏற்பாடுகள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நாடாளுமன்ற தேர்தல் வியூகம், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு நவம்பர் 4,5,14,15 ஆகிய தேதிகளில் வாக்காளர்களை சேர்த்தல் நீக்குதல் சிறப்பு முகாம் அமைத்து அதில் புதிய வாக்காளர்களைஅதிகப்படியாக சேர்த்தல், கூட்டுறவு சங்கங்களில்அதிகப்படியானபுதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்உள்ளிட்டதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

கூட்டத்தில்பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள்,மாவட்டகவுன்சிலர், வார்டு கவுன்சிலர்கள், ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள்,கிளை செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### முன்னாள் வட்டக் கழக துணை செயலாளர்

# சி.மாயவன் மறைவு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - கழகத்தினர் அஞ்சலி!



சென்னை அக்: 9

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதிக் கழக மூத்த முன்னோடியும் முன்னாள் 78வது வட்டக் கழக துணைச் செயலாளருமான சி.மாயவன்(வயது 71) அவர்கள் நேற்று 81023 காலை 10 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதைஅறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின்உடல்இன்று (9-10-2023) ஓட்டேரி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது. முகவரி, சச்சிதானந்தன் தெரு குடிசை பகுதி பின்புறம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து சென்னைகிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

78வது வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர் அணி சார்ந்தவர்கள்,மலர்அஞ்சலி செலுத்தினார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆரணி கோ. வெற்றிவீரன்

### அக்டோபர் 9 (2019)



**1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.**

**மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.**

**‘நம்நாடு’ இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.**

**கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.கே. சீனிவாசன்

### அக்டோபர் 9 (1989)



**கழகத் தோழர்களால் ‘தத்துவ மேதை’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.**

**ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.**

**சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.**

**1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.**

**1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கழக வழக்கறிஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# நெல்லை மண்டல அளவில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

நெல்லை.அக்.9-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் நெல்லை மண்டல அளவிலான மாணவர்,மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி நெல்லை அரசு சட்டக் கல்லூரியில் வைத்து கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை இணை செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா, மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் ஜெ.செல்வசூடாமணி எம். காமினிதேவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ் ரவிச்சந்திரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு நடுவராக தலைமை கழக வழக்கறிஞர் சூரிய வெற்றி கொண்டான்,நெடுமாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் கழக சட்டத் துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. பேசியதாவது.

கலைஞரின் சாதனைகளைப் பற்றி நீங்கள் பேசுவதை கேட்பதற்கு நாங்கள் வந்துள்ளோம்.இதனை அரசியல் கட்சி நிகழ்வாக பார்க்க வேண்டாம்.கலைஞர் அவர்கள் சமூக நீதி,மகளிர் உரிமை, கல்வியில் முன்னேற்றம்,போன்ற எந்த எந்த துறையில் முன்னேற்றத்தை எடுத்துச் சென்றுள்ளார்களோ, அதன் அடிப்படையில் தான் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.இங்கு மகளிர் அதிக அளவு வந்துள்ளீர்கள், அதற்கு காரணம் கலைஞர் தான்.தமிழகத்தின் வளர்ச்சியில் எந்த பரிமாணமானங் களை பார்த்தாலும் கலைஞரின் பங்கு உண்டு.கலைஞரின் முழு உழைப்பு எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் இது நடக்கிறது.

ஜனநாயக நாட்டில் எந்த ஒரு கொள்கையை வேண்டுமானாலும் உங்கள் மனதில் பட்டதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது குறித்து விளக்க வேண்டியது எங்களுடைய கடமை. திராவிட சித்தாந்தங்களும் திராவிட மாடலும் இந்தியாவிற்கு வழிகாட்டியாக உள்ளது.தமிழகத்தில் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கிறது அதுவே திராவிட கொள்கை."திராவிட மாடல் ஆட்சி"ஆகும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி,சட்டக் கல்லூரி உருவாக்கித் தந்தவர் கலைஞர். அப்படிப்பட்ட கலைஞரின் சாதனைகளை நீங்கள் பேச வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் போட்டிகளை நடத்திட உத்தரவிட்டு உங்கள் பேச்சுக்களை கேட்க மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

மண்டல அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறுவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 50,000,2வது பரிசு 25 000,ம் 3வது பரிசு 15000,ம் 2 ஆறுதல் பரிசு ரூபாய் 5000,ம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் 6ம் தேதி ஒரு எழுச்சி மிகுந்த மாநாடு சென்னையில் நடைபெற்ற உள்ளது. அன்று போட்டிகளுக்கான இறுதி சுற்று நடைபெறுகிறது.

இவ்வாறு கழக சட்டத் துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி.பேசினார்.

இந்தப் போட்டியில் நெல்லை அரசு சட்டக் கல்லூரி,வாசுதேவநல்லூர் தங்கப்பழம் கல்லூரி,தூத்துக்குடி கல்லூரி சேர்ந்த மாணவர், மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**போட்டிக்கான தலைப்புகள்:**

கலைஞரின் பார்வையில் சமூக நீதி.

கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி.

கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்.

கலைஞரின் பார்வையில் தொழில் வளம்.

கலைஞரின் பார்வையில் கல்வி.

ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற பேச்சு போட்டியில் மாணவ,மாணவிகள் உட்பட 44 பேர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜா முகம்மது,தென்காசி வடக்கு மாவட்ட அமைப்பாளர் பிச்சையா, துணை அமைப்பாளர்கள் தவசிராஜன்,விஜயகுமார்,கார்த்திக் தம்பிரான், அருள் ராஜா,மணிகண்டன்,பரமசிவன் மற்றும் ஹரிபாலகிருஷ்ணன், கந்தசாமி உள்பட கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கூரை அமைப்பதற்கான இடத்தினை பார்வையிட்டு செய்தித்துறை மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், முருகவேல், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் சுப.த.திவாகரன், மக்கள் செய்தி துறை இயக்குனர் த.மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மா.கிரகாம்பெல் தலைமை! ஜான் கென்னடி வரவேற்புரை!

# திசையன்விளையில் கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் - நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

நெல்லை.அக்.9-

நெல்லை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் திசையன்விளை நேரு திடலில் மாவட்ட அவை தலைவர் மா.கிரகாம்பெல் தலைமையில் ஒன்றிய அவை தலைவர் முத்துராமலிங்கம், நகர அவை தலைவர் ரெங்கசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நகர செயலாளர் ஜான் கென்னடி வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் பா.சம்பத் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, மதிமுக மாவட்ட செயலாளர் உவரிரைமண்ட், பொதுநல பேராளி ரகுமான், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முருகன்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அல்பின் அன்றனி பிரேமா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ். என்.முருகன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரேம்ஆனந்த், ராதாபுரம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் வீனஸ்வீர அரசு, தனபால்,பேரூர் கழக நிர்வாகிகள் ரவிக்குமார், சுதர்சன், சுகந்திஜேசன், கனிஷ்கர், பரமசிவன், சௌந்தர், ஒன்றிய பிரதிநிதிகள் சீனிவாசன், வசந்தகுமார், அணி துணை அமைப்பாளர்கள் சுவிகர், ஐஸ்வர்யா, பிரபு, நஸ்ருதீன், ஆண்ரூஸ் ஜேசன், குட்டம் கண்ணன், பன்னீர் செல்வம், சத்திய பாலன், ஞான ராஜ், சுரேஷ், சரோஜா முத்துதுரை,

லிங்க தமிழரசன்,பரிமளம்,பலவேசம், ஜான்சன்,நவநீதகிருஷ்ணன், கமலா நேரு, ஜெனிபர், கோபிகோபால கண்ணன், சுரேஷ் பாக்கியம், சிவானந்த பெருமாள் என்ற சிவா,முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் ஜெயராஜ்,கலைஞர் மின்னொளிப்படை மார்ட்டின், ஈகிள் ராஜா, கிறிஸ்டோபர் ராபின், பேரூர் அணி அமைப்பாளர்கள் ஆசிக்முகமது, சுரேஷ், கனி, அசன்அலி, ரியாத்தான், பேச்சிமுத்து சக்திவேல், ராஜா, மகளிர் அணி பிரேமா ஜெயபால், சுயம்புராஜ், வீரமணி, தங்கவேல், கிறிஸ்டோபர்,

சுந்தர்ராஜன்,கழக வழக்கறிஞர் கார்த்திக் ராஜா,நல்லாசிரியர் திரவியம் பொன்ராஜ், கழக முன்னோடிகள் பிரகாசம், பரமசிவன், ஜெயராஜ் உள்பட கழக தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 5வது வார்டு செயலாளர் அருண்குமார் நன்றி உரையாற்றினார்.

அமைச்சர் ஆர்.காந்தியின் உறவினர்

# பெங்களூர் சந்திரசேகர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் - அமைச்சர் காந்திக்கு ஆறுதல் - இரங்கல்!

சென்னை,அக்.9-

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சரும் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளருமான ஆர்.காந்தி அவர்களது உறவினரான பெங்களூர் சந்திரசேகர் அவர்கள் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து கழகத் தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி வாயிலாக காந்தி அவர்களைத் தொடர்புகொண்டு தமது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார்.

## தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

## 34வது ஆண்டு நினைவு வணக்கம்



தோற்றம் 14.11.1922

மறைவு 9.10.1989

*என்றும் தங்கள் வழி நடக்கும்*

**டி.கே.எஸ்.இளங்கோவன்**, Ex. M.P., (செய்தி தொடர்பு தலைவர் தி.மு.க.) — **நளினி**

**டி.கே.எஸ்.மணிவண்ணன்** — **குணபூஷணி**

**டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி** — **எஸ்.தமிழ்மணி**

**திருமதி கீதாலட்சுமி வில்லாளன்**

**திருமதி. மாதவி – ஜான் விஜய்,**

**திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,**

**சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,**

சிவகங்கை மாவட்டம்: திருப்புவனத்தில்

# திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - கீதாஜீவன் தொடங்கி வைத்து சிறப்புரை!

சிவகங்கை.அக். 9-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவரும் முதல் வருமான மு .க .ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி மாநில மகளிர் தொண்டரணி சார்பில் ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த தலைவர் கலைஞர் என்னும் தலைப்பில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் பங்குபெறும் மதுரை மண்டல அளவிலான மாபெரும் முதல் கருத்தரங்கம்திருப்புவனத்தில் நடைபெற்றது.

மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளருமான திருமதி தமிழரசி ரவிக்குமார் தலைமையில் முன்னாள் அமைச்சர் மூ. தென்னவன், மாநில மகளிரணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி நாமக்கல் ராணி, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் திருமதி விஜிலாசத்தியானந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவரும் மாவட்ட துணை செயலாளருமான த.சேங்கைமாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில தவழும் மாற்றுத் திறனாளிகள் சங்க பொதுச் செயலாளர் மதுரை சொக்கன் ராஜா வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கில் கலைஞரும் அவரைத் தொடர்ந்து முதல்வர் தளபதி செய்த சாதனைகளை பட்டியலிட்டு திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர் பிரியா பாபு, டிசம்பர் 3 இயக்க மாநில தலைவர் லயோலா கல்லூரி கல்லூரி பேராசிரியரும் மாற்றுத்திறன் நல வாரிய உறுப்பினர் பேராசிரியர் டி. எம். என். தீபக், மாநில தவழும் மாற்று திறனாளிகள் சங்க மாநில தலைவரும் , மாநில மாற்றுத்திறனாளிகள் வாரிய உறுப்பினருமான கே. டி .ஜி. புஷ்பராஜ் ஆகியோர் பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் பேசியதாவது.

கலைஞர் முதல்வராக இருந்த பொழுது மாற்றுத்திறனாளிகளுக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தினார் மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்க உத்தரவிட்டார். பேருந்தில் பயணம் செய்தால் உடன் செல்பவர்களுக்கும் கால் டிக்கெட், என்று அறிவித்தார் . தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு 19 உத்தரவினை பிறப்பித்து அதை நிறைவேற்றி னார். ரயிலில் ரிசர்வ்செய்து செல்லலாம் என்றுஇருந்ததை மாற்றி இந்தியாவில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகள் தனிபெட்டியில் ரயிலில் செல்ல வழி ஏற்படுத்தி தந்தார். திருநங்கைகள் என்று அழகான பெயர் சூட்டி மகிழ்ந்தார். தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வரும் மாற்றுத்திறனாளிகள் உதவி தொகை அதிகரிப்பு, நலத்திட்ட உதவிகள் இருமடங்கு. உயர்வு, திருநங்கைகள் 5பேர் இருந்தால் சுய மகளீர் உதவி குழுக்கள் துவங்கலாம் என்று உத்திரவினை கலைஞர் பிறப்பித்தார்.தொழில் துவங்க ருபாய் 50ஆயிரம் கடனுதவி வழங்கவும் வழி வகை செய்துள்ளார் . கலைஞர் ஆட்சியில் ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் தங்களது வாழ்வில் முன்னேற்றம் அடைந்தார்கள். அவர்கள் முன்னேற்றம் அடைவது போல் திருநங்கை. களும் மாற்றுத்திறனாளிலும் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் விரும்பி மாற்றுத்திறனாளிகள் துறையினை தன்வசம் வைத்திருந்தார். முதல்வர் தளபதி அவர்களும் தலைவர் கலைஞர் வழியில் மாற்று திறனாளிகள் துறையை தன்வசம் வைத்துள்ளார். தலைவர் கலைஞர் அவர்கள்வழியில் தளபதி அவர்கள் உங்களது வாழ்வில் பல நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று விரும்பி செயல்பட்டு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவித்து வருகிறார். எனவே இத்தகைய சாதனை களை செய்த கலைஞர் அவர்களை நூற்றாண்டு விழாவில் அவரை நாம் நினைத்துப் பார்ப்பது நமக்கு பெருமையாக இருக்கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு அங்கீகாரம் தந்த தலைவர் கலைஞர் வழியில் அயராது பணியாற்றி வரும் தளபதி அவர்கள் கரத்தினை வலுப்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது அரசுத்துறைகளில் பல்வேறு சாதனைகள் படைத்திருந்தார். அதில் மாற்றுத்திறனாளிகள் திருநங்கைகளுக்கு பெயர் சூட்டி அழகு பார்த்து மகிழ்ந்தார். பல்வேறு உதவிகளையும் செய்து வந்தார். தன் வசம் இந்த துறையினை வைத்து உங்களுக்கு நேரடியாக பல்வேறு உதவிகளை செய்து வந்தார். தலைவர் கலைஞர் செய்ததை விட அதை மிஞ்சும் வகையில் கூடுதலாக முதல்வர் தளபதி அவர்கள் தற்பொழுது பல்வேறு திட்டங்களை மாற்றுத்திறனாளிக்கும் திருநங்கைகளுக்கும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார் .உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டிருந்தாலும் உங்களது உள்ளத்தில் பாதிப்பு இல்லை. தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் எத்தகைய திட்டங்களை உங்களுக்கு செயல்படுத்துகிறாரோ அவரது வழியில் நாங்கள் அன்புடன் உங்களை அரவணைத்து திட்டங்கள் நிறைவேற்றி உங்களது வாழ்வில் ஒளி ஏற்றுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் 550 மாற்றுத்திறனாளிகள் 50 திருநங்கைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் கே ஆர். பெரிய கருப்பன் திருமதி கீதா ஜீவன், தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள். திருநங்கை மதுரை சோனு நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், ஒன்றிய செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்பசாமி, துரை.ராஜா மணி, வே.தமிழ்மாறன், மானாமதுரை நகர கழக செயலாளர் க.பொன்னுசாமி, பேரூர்கழகச் செயலாளர் நாகூர் கனி,மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில்,மகளிரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட் கமலா, பாக்கியலட்சுமி ,சண்முகப்ரியா,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதிராஜ்குமார், மாவட்ட வர்த்தக அணிதலைவர் ருக்மா சரவணன், திருபுவனம் ஒன்றிய குழு துணைத் தலைவர் மூர்த்தி, பேரூராட்சி மன்ற துணைதலைவர் ரஹ்மத்துல்லா நிர்வாகிகள் அண்ணாமலை மகேந்திரன், சேகர் ஈஸ்வரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் தொண்டர் அணி இணைசெயலாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. திருப்புவனம் பேரூராட்சி தலைவர் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் மற்றும் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கபடா ராஜி (கே. ராஜி)

### அக்டோபர் 9 (2008)



**திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.**

**1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.**

**பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**






மறைமலைநகர் நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரசாரச் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற அரசு தலைமை கொறடா கோவி.செழியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட துணை செயலாளர் து.மூர்த்தி உள்ளிட்டோர் உள்ளனர்.

திருவொற்றியூர் 9வது வட்டச் செயலாளர்

# எம்.எல்.சரவணன் - உமா சரவணன் எம்.சி. மகள் கீர்த்தனா மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 9 –

திருவொற்றியூர் 9வது வட்டச் செயலாளர் எம்.எல்.சரவணன், உமா சரவணன் எம்.சி. ஆகியோரின் மகள் கீர்த்தனா நேற்று (08.10.2023) மறைவெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 9ஆவது வட்டத்தைச் சேர்ந்த வட்டக் கழகச் செயலாளர் M.L. சரவணன் பெருநகரச் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் (9ஆவது வார்டு) திருமதி. உமா சரவணன் ஆகியோரின் அன்பு மகள் S. கீர்த்தனா அவர்கள் இன்று (08.10.2023) அதிகாலை மரணமடைந்தார் என்றறிந்து வேதனையுற்றேன்.

பாசத்துடன் போற்றி வளர்த்த தங்கள் மகளை இளம் வயதிலேயே இழந்து தவிக்கும் பெற்றோர் இருவருக்கும் திருவொற்றியூர் பகுதிக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, தொகுதி தலைமை கழக பொறுப்பாளர் மருத்துவர் யாழினி மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை !

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ.வேலு - வி.சுதாகர் வேண்டுகோள்!

சென்னை, அக்.9

எழும்பூர்வடக்கு தெற்கு பகுதிகழகச்செயலாளர்கள் சொ.வேலு,வி.சுதாகர் ஆகியோர்விடுத்துள்ளஅறிக்கை வருமாறு ;

சென்னைகிழக்குமாவட்டம்,எழும்பூர் சட்டமன்ற தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம் (இன்று 9.10.2023) மாலை 4 மணியளவில் கிரின் சிட்டி பாராக் மகாலில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறாா.

மாநில நெசவாளர் அணி தலைவர் ஓ.எ.நாகலிங்கம் முன்னிலை வகிக்கிறார்.

எனவே கூட்டத்திற்கு தொகுதிக்குட்பட்டஅணிகளின் மாநில மாவட்ட அமைப்பாளர்கள்,

செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் வட்டகழகச்செயலாளர்கள் பாகநிலைமுகவர்கள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பகுதி கழகச் செயலாளர்கள்சொ.வேலு, வி.சுதாகர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# இளைஞர் அணி நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, அக். 9-

கிருஷ்ணகிரியில் கிருஷ்ணகிரிகிழக்குமேற்குமாவட்டத்தின் ஒன்றிய , நகர , பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணலில் 600 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட ஒன்றிய , நகர,பேரூர் இளைஞர் பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப்படத்திற்குமாலைஅணிவித்து மரியாதை செய்யப்பட்டது பின் நேர்காணல் நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்டசெயலாளர்சட்டமன்றஉறுப்பினர் தே. மதியழகன் , மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் 600க்கும் மேற்பட்ட இளைஞர்கள்கலந்துகொண்டனர் அவர்களிடம் கழக மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜோயல் இன்பாரகு இளையராஜா அப்துல் மாலிக் பிரகாஷ் பிரபு சீனிவாசன் பிரதீப் ராஜா ஆனந்தகுமார் ஆகியோர் பங்கேற்று கலந்து கொண்ட இளைஞர்களிடம் நேர்காணலை நடத்தினார்கள் மேலும் இதுகுறித்து அவர்கள்கூறும் போது நேர்காணலில் கலந்து கொண்டவர்களிடம் கட்சி பணிகள் குறித்தும் கல்வி தகுதி குறித்தும் கேட்டுள்ளோம் தகுதி அடிப்படையில் ஒன்றிய , நகர,பேரூர்இளைஞர்அணி பொறுப்புகளுக்குதேர்ந்தெடுக்கப்பட்டுதலைமைக்கழகத்தால் அறிவிக்கப்படும் என தெரிவித்தனர்.

முன்னதாக கிருஷ்ணகிரியில் இளைஞரணி சார்பில் திறக்கப்பட்டுள்ளகலைஞர் நூலகத்தைஇளைஞர்அணி மாநில துணை செயலாளர்கள் பார்வையிட்டனர்.

இந்த நேர்காணல் நிகழ்ச்சிகளைகிருஷ்ணகிரிகிழக்கு மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன் , சுமன் மற்றும் துணை அமைப்பாளர்கள் மகேந்திரன்,சரவணன், சங்கர்,லயோலாராஜசேகர் ,சத்தியமூர்த்தி ,கிருஷ்ணன் நரசிம்மன் பிரபாகரன் (எ) ராஜா , தனு குமார் நாகப்பன், முஜமில் பாஷா ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை !

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி - எஸ் ராஜசேகர் வேண்டுகோள் !

சென்னை, அக். 9 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதி பாக நிலை முகவர்கள் கூட்டம் இன்று (9.10.2023, திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் எண்:1, ஆதியப்பன் தெரு, சென்னை.1, ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார். இந்நிகழ்ச்சியில் தயாநிதி மாறன் எம்.பி., துறைமுகம் தொகுதி தலைமை கழக பொறுப்பாளர் க.பிரபு ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எனவே கூட்டத்திற்கு தொகுதிக்குட்பட்ட செயற்குழு, பொதுக்குழு, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள் அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மயிலை மேற்குப் பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் மதி அறிக்கை!

சென்னை, அக்.9-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி ஆலோசனை கூட்டம் இன்று (09.10.2023) மாலை 6:00 மணியளவில் அவை தலைவர் ஜி.ஆர். ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர்.எல்.வி.அசோக், ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு முன்னிட்டு மயிலை மேற்கு பகுதி முழுவதும் கழக கொடியெற்றுதல் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இடம்: மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலக வளாகம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி. கேட்டுக்கொண்டுள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் லீக் இணைந்து நடத்தும் கலைஞர் 100 சைக்கிளத்தான், சென்னை கலங்கரை விளக்கம் முதல் மகாபலிபுரம் வரை சென்று கலங்கரை விளக்கத்தில் முடியும் 100 கிலோமீட்டர் காண 100 சைக்கிள் வீரர்கள் பங்கேற்ற சைக்கிளத்தானின் பரிசளிப்பு விழா கலங்கரை விளக்கம் அருகே நேற்று நடந்தது. இதில் கலந்து கொண்டவர்களுக்கு திமுக விளையாட்டு அணி பிரிவு செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தா.வேலு, சோளிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.

# லடாக்கில் ராணுவ வாகனம் ஆற்றில் விழுந்து விபத்து!

டெல்லி, அக்.9-

லடாக்கில் ராணுவ வீரர்கள் சென்ற வாகனம் ஆற்றில் விழுந்து விபத்துக்குள் ளாகியுள்ளது. இந்த விபத்தில் வாகனத்தில் சென்ற 9 வீரர்கள் பலியாகியிருப்பதாகவும், ஒரு வீரர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. லடாக்கில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ வீரர்கள் தங்கள் முகாமுக்கு வாகனங்களில் திரும்புவதும் மீண்டும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள இடங்களுக்கு வாகனங்களில் செல்வது வழக்கம். ஆபத்தான மலைப்பாதைகளை கொண்ட லடாக் யூனியன் பிரதேசத்தில் மிகவும் சவாலான தட்பவெப்ப நிலையையும் பொருட்படுத்தாது தேசத்தை காக்கும் பணியில் ராணுவ வீரக்ள் ஈடுபட்டுள்ளனர்.

கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்கு பிறகு லடாக்கில் சீன எல்லையை ஒட்டிய பகுதியில் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டது. சீனாவின் அத்துமீறலை முறிய டிக்கவும், எல்லையைப் பாதுகாக்கவும், நம் ராணுவ வீரர்கள் அதிக அளவில் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் படுள்ளனர். இந்த நிலையில், இன்று லடாக்கில் ராணுவ வீரர்கள் சென்ற டிரக் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த பயங்கர விபத்தில் டிரக்கில் சென்ற ராணுவ அதிகாரி மற்றும் 8 ஜவான்கள் என மொத்தம் 9 பேர் பலியாகினர். ஒரு வீரர் காயத்துடன் மீட்கப்பட்டார்.


பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

சேப்பாக்கம் க.சந்தானகிருஷ்ணன்

( முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் வட்ட கழக செயலாளர் )

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...

தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்...

மகன்கள் : ச.அம்மையப்பன் ச.ராஜேந்திரன் ச.கலைச்செல்வன் ச.மதிவாணன் ச.கரிகாலன்

மகள், மருமகன்: ச.ரதி க.ராஜசேகர்

மருமகள்கள் புவனேஸ்வரி அம்மையப்பன் புவனேஸ்வரி ராஜேந்திரன் தனலட்சுமி கலைச்செல்வன் சுதா மதிவாணன் ஷர்மிளா கரிகாலன்

பெயரன்கள் கலாநிதி ராஜா அம்மையப்பன் நிரஞ்சன் ராஜசேகர் அஷ்வின் ராஜேந்திரன் ராகவ் ராதாகிருஷ்ணன் கரிகாலன்

பெயர்த்திகள் ஷாலினி அம்மையப்பன் காவ்யா மதிவாணன் அக்ஷயா மதிவாணன்

ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை



31 ஆம் ஆண்டு நினைவு தினம்

முன்னாள் ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட

தி.மு.க.அவைத்தலைவர்



திரு.R.கோபால்சாமி

அவர்களின் நினைவுகளுடன் வணங்குகிறோம்...

திரு. கோ.தளபதி MLA.

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி

செயலாளர் ~ மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

மற்றும் குடும்பத்தினர்கள், திருப்பரங்குன்றம்,மதுரை.

MR Graphics , mdu - 9965567373



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்
விழா நாள் : 08-10-2023
100
கழகத்தின்
முதல் நாடாளுமன்ற உறுப்பினர்
இரா.தர்மலிங்கம் Ex.MP
நூற்றாண்டு விழா
பேரறிஞர் அண்ணா மற்றும்
முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன்
தோளோடு தோள் நின்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தின்
முன்னோடித்தலைவர் மற்றும்
கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்,
ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்ட தி.மு.க.வின்
15 ஆண்டு கால முன்னாள் மாவட்டச்செயலாளர்,
திருவண்ணாமலை தொகுதியின்
10 ஆண்டுகால (1957-1967)
பாராளுமன்ற உறுப்பினர்,
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை
இணையத்தின் முன்னாள் பெருந்தலைவர்,
வடஆற்காடு விற்பனைக்குழுவின்
10ஆண்டு கால (1968-1978) தலைவர்,
திருவண்ணாமலை நகர மன்றத்தின்
5ஆண்டு கால(1970-1975) தலைவர்
திருவண்ணாமலை
நினைவில்வாழும் இரா.தர்மலிங்கம் Ex.MP
அவர்களின் நூற்றாண்டு விழா நடத்தி கௌரவித்து சிறப்பித்த
தலைமை :
மாண்புமிகு எ.வ.வேலு
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
முன்னிலை :
கு.பிச்சாண்டி
சட்டப் பேரவைத் துணைத்தலைவர்
எம்.எஸ்.தரணிவேந்தன்
திருவண்ணாமலை (வ) மாவட்டச் செயலாளர்
வரவேற்புரை :
இரா.ஸ்ரீதரன்
தலைமை செயற்குழு உறுப்பினர்
விழா சிறப்புரை :
மாண்புமிகு மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்
நயவுரை நம்பி - திராவிட ஆழ்வார்
முனைவர் சா.ஜெகத்ரட்சகன்
த.வேணுகோபால் Ex.MP
மாவட்ட அவைத்தலைவர்
மருத்துவர் எ.வ.வே.கம்பன்
மாநில தடகள சங்க துணைத்தலைவர்
சி.என்.அண்ணாதுரை MP
மு.பெ.கிரி MLA
பெ.சு.தி.சரவணன் MLA
எஸ்.அம்பேத்குமார் MLA
ஒ.ஜோதி MLA
நன்றியுரை : ப.கார்த்திக்வேல்மாறன் நகரச் செயலாளர்
விழாக் குழுவினர்கள்
எஸ்.பன்னீர்செல்வம் முன்னாள் கூட்டுறவு சங்கத்தலைவர்
ப.விஜயரங்கன் மாவட்ட து.செயலாளர்
எம்.இ.ஜமாலுதீன்
வி.தனுசு
ப.இந்திரராஜன்
எஸ்.ரவிச்சந்திரன்
மற்றும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எங்கள் குடும்பத்தினர்கள் சார்பில்
நெஞ்சம் நிறைந்த நன்றி.. நன்றி.. நன்றி..
(நினைவில் வாழும்) Dr.இரா.த.மதியழகன்
அன்னை கிளினிக், வேட்டவலம்
(நினைவில் வாழும்) Er.இரா.த.அன்பழகன்
தலைமை பொறியாளர்
பொதுப்பணித்துறை (நீர்வளத்துறை) - ஓய்வு
(நினைவில் வாழும்) இரா.த.சம்பத்
தலைமை பொதுக்குழு உறுப்பினர் / திருவண்ணாமலை மாவட்ட
வேளாண்மை விற்பனைக்குழு முன்னாள் தலைவர்
மருமகள்கள் : விஜயா அன்பழகன் சென்னை கல்பனா சம்பத் திருவண்ணாமலை
மகள்கள் : திலகவதி தண்டபாணி சென்னை செல்வி அருணகிரி சென்னை மீனா விநாயகம் திருவண்ணாமலை தேன்மொழி புகழேந்தி சென்னை
பேரன்கள், பேத்திகள் : செந்தில்குமார் மதியழகன் B.Tech.,M.Tech., - கடலூர் மதிவாணன் (எ) பிரதீப் அன்பழகன் B.E.,M.S.,M.B.A.,- சென்னை
கிருபாசங்கர் சம்பத் B.E.,M.S.,- USA தினேஷ் சம்பத் B.E.,M.B.A.,- திருவண்ணாமலை சுரேஷ்குமார் தண்டபாணி B.E.,M.Sc.,- சென்னை சந்தோஷ் அருணகிரி B.E.,M.B.A.,- USA
சதீஷ் விநாயகம் B.E.,- MUSCAT வினோத் விநாயகம் B.C.A.,M.B.A.,- South Africa ஜோகேஷ் புகழேந்தி B.E.,M.S.,- USA ப்ரியா அன்பழகன் B.Arch- சென்னை
சுனிதாதேவி தண்டபாணி B.C.S- சென்னை கவிதா அருணகிரி B.Sc- சென்னை சங்கீதா அருணகிரி B.E.,M.S.,- USA விலாசினி புகழேந்தி B.E.,- Australia
எங்களின் முன்னோர்கள் வகுத்த பாதையில் கழகக் கொள்கை பிடிப்புடன் கழகத்தலைவர் அவர்களது வழியில்
எங்களது தலைமுறைகள் என்றென்றும் பாதை மாறா பயணத்தை தொடருவோம்..
JAGAN ADS - 9962969675

# திராவிட மாடல் அரசு 38

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## இது நம்ம கோயில் கல்யாணம்!

**‘திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன’** என்பார்கள். அவை பூமியில் நிச்சயிக்கப் பட்டாலும்கூட, பணம் படைத்தவர்களால் நடத்தப்படும் திருமணங்களின்போது சொர்க்கமே பூமிக்கு வந்துவிட்டதோ என்று எண்ணும் அளவுக்கு எங்கு திரும்பினாலும் ஆடம்பரம் கண் கூச வைக்கும்.

அதுபோன்ற செலவீனங்களைக் குறைத்து, எளிமையான முறையில் திருமண நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் சுயமரியாதைத் திருமணங்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் தரப்பட்டது.

என்றாலும், ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து வருகிற மரபார்ந்த நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றுவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். அதுவரை, அந்த மரபார்ந்த விஷயங்களையும் உள்ளடக்கிச் செல்வதே **‘திராவிட மாடல் அரசு’** செல்லும் தடம்.

கூலி வேலை செய்கின்ற, அன்றாடம் வாழ்க்கைப் பாட்டுக்குப் போராடுகிற மக்களுக்குத் தங்கள் குடும்பங்களில் நடைபெறுகிற திருமணங்களை மண்டபங்களில் வைத்துக்கொள்ள வசதி இருக்காது. அவர்களுக்குக் கண்கண்ட சொர்க்கம், மண்டபம் என்பதெல்லாம் கோயில்கள்தான். அந்தக் கோயில்களில் நடைபெறும் வறியவர்களின் திருமணங்களை உற்றாரும் உலகத்தாரும் போற்றும்படி, தங்கத்தில் திருமாங்கல்யம், கட்டில், பீரோ போன்றவை எல்லாம் வழங்கி, அவர்களின் மாண்பை உயர்த்துவதுதான் ‘திராவிட மாடல் அரசு’ அறிவித்துள்ள ‘திருக்கோயில்களில் திருமணம்’ எனும் திட்டம்.

### தி.மு.க.வும் திருக்கோயில் திருமண மண்டபங்களும்

1967-இல் நமது கழகம் தேர்தலில் நின்றபோது, “தி.மு.க. வெற்றி பெற்றால், தேவாலயங்கள் இடிக்கப்படும்! தேர்த் திருவிழா நின்றுவிடும்! தெப்போற்சவம் தடுக்கப்படும்! மதவாதிகள் மனம் புண்படுத்தப்படும்! ஆண்டவன் திரு உலா இருக்காது! ஆறுகால பூஜை நடக்காது! ஆடிக்கிருத்திகை இல்லை! ஆனித் திருமஞ்சனம் இல்லை! மாசி மகமில்லை! பங்குனி உத்திரமில்லை! கார்த்திகை தீபமில்லை! கருமாரியம்மன் விழா இல்லை!” என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் எழுதின, பேசின.

அப்படிப் பேசிய எதிர்க்கட்சி ஆட்சியிலிருந்த போது 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் கட்டப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை வெறும் 34 மட்டும்தான். ஆனால், 1967-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு வரை கழகம் ஆட்சியில் இருந்தபோது கோயில்களில் ஏற்படுத்தப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 213 ஆகும்.

இவ்வாறு, கொள்கையில் உறுதிப்பாட்டோடு இருந்தாலும், மக்களின் நம்பிக்கைகள் என்று வரும்போது, அதற்கேற்றபடி தன்னை நெகிழ்த்திக் கொள்வதும் கழகம் கடைப்பிடிக்கும் நெறிகளில் ஒன்று. முத்தமிழறிஞர் கலைஞரின் காலத்தில் கோயில் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை அதிகரித்ததைப் போலவே, அங்கு நடைபெறும் இலவசத் திருமணங்களுக்கான நிதி உதவியை 1996-2000 காலகட்டத்தில், ரூ.1,500 என்பதிலிருந்து ரூ.3,000 என்று உயர்த்தியவரும் கலைஞர்தான்.

### ரூ.50 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசை

முத்தமிழறிஞர் கலைஞரின் நெகிழ்வுத்தன்மையை நம் கழகத் தலைவர் முதலமைச்சரும் பின்பற்றுவதன் வெளிப்பாடே, பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்குக் கோயில்களில் நடத்திவைக்கப்படும் திருமணங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியை ரூ.20 ஆயிரம் என்பதிலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறது நம் ‘திராவிட மாடல் அரசு’.

2023-2024 ஆம் ஆண்டு சட்டப் பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், “பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி, திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு, திருக்கோயில் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்துக்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாகத் திருமண விழா நடத்தி வைக்கப்படும்” என்று அறிவித்தார்.

### 4 மாதத்தில் 400+ திருமணங்கள்

இந்தச் சட்டமன்ற அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக, முதற்கட்டமாக சென்னை-1 மற்றும் சென்னை-2 ஆகிய இரண்டு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உட்பட்ட 34 தகுதி வாய்ந்த ஏழை எளிய இணைகளுக்கு மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில், 2023 ஜூலை 7 அன்று, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. அதே நாளில் மாநிலம் முழுவதும் மொத்தம் 222 இணைகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 19- அன்று நீர்வளத்துறை அமைச்சர் முன்னிலையில் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பாக, 20 இணைகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் நடத்தப்படும் திருமணங்களுக்கான நிதியை உயர்த்துவது தொடர்பாக, 2023-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அரசாணை வெளியானது. தொடர்ந்து, இப்போது வரை 477 இணைகளுக்குத் திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

### அறம் செய்யும் அரசு!

மயிலாப்பூர் கோயிலில் நடைபெற்ற திருமணங்களை முன்னிலை வகித்து நடத்தி வைத்த நமது முதலமைச்சர் அவர்கள் தனது உரையில், “மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். அதேநேரத்தில் நம்முடைய மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், தமிழ் உணர்வை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், ‘வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்’ இருந்து நீங்கள் பாடுபடுங்கள், பணியாற்றுங்கள், உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்” என்று வாழ்த்தினார்.

அவர் மேலும் ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொன்னார். “மறைந்த பெரியவர் - தவத்திரு குன்றக்குடி அடிகளார் **‘கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்’** என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில்தான் 34 இணையருக்கு திருக்கோயில்கள் சார்பில், திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. **இந்தத் துறைக்கு இந்து சமயத் துறை என்று பெயரல்ல, இந்து சமய அறநிலையத் துறை என்று பெயர்.** அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற அறப்பணிகளைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்”.

**ஆம்... திராவிட மாடல் அரசு என்பது அறம் செய்ய விரும்பும் அரசு அல்ல... அறம் செய்கிற அரசு. அதை ‘தமிழ்நாட்டுக் கோயில்களை மாநில அரசு ஆக்கிரமிப்பு’ என்றும் பிதற்றுபவர்கள் விரைவில் உணர்ந்துகொள்ளும் காலம் வரும்..!**

**...சாதனை தொடரும்**

### இது ‘தாயுமானவர்’ அரசின் சீதனம்...

| | |
|---|---|
| 1) திருமாங்கல்யம் 4 கிராம் தங்கம் சந்தை விலைக்கு ஏற்ப... | |
| 2) மணமகன் ஆடை | ரூ.1,000 |
| 3) மணமகள் ஆடை | ரூ.2,000 |
| 4) திருமணத்துக்கு மணமக்கள் வீட்டார் 20 பேருக்கு உணவு | ரூ.2,000 |
| 5) மாலை, பூக்கள் | ரூ.1,000 |
| 6) பீரோ | ரூ.17,800 |
| 7) கட்டில் | ரூ.17,500 |
| 8) மெத்தை | ரூ.2,200 |
| 9) தலையணை | ரூ.2,190 |
| 10) பாய் | ரூ.1,180 |
| 11) கைக்கடிகாரம்-2 | ரூ.1,000 |
| 12) மிக்ஸி 1 | ரூ.1,490 |
| 13) பூஜைப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் வகையறா | ரூ.3,640 |

மொத்தம் ரூ.30 ஆயிரம் + 4 கிராம் தங்கத்துக்கான சந்தை விலை என ரூ.50 ஆயிரம் நிதி உதவி

## அடுத்தத் தாக்குதல் ‘பாரி’ மீதா?

‘**சீ**னாவின் கையாள்’ என்று **‘நியூஸ்கிளிக்’** இணைய இதழ் பற்றி, ஒரு பொய்ச் செய்தியின் அடிப்படையில், சர்வதேச அளவில் பிரபலமான ‘நியூயார்க் டைம்ஸ்’ இதழ் எழுதப் போக, அந்த இதழைச் சார்ந்த பத்திரிகையாளர்களைக் கைது செய்தது ஒன்றிய அரசு. தற்போது அந்த நிகழ்வு குறித்து ‘டைம்ஸ் நவ்’ தொலைக்காட்சியில் நடைபெற்ற விவாதம் ஒன்றில், ராஜீவ் மல்ஹோத்ரா எனும் இந்துத்துவ எழுத்தாளர் **‘நியூஸ்கிளிக்’**கை தொடர்ந்து, அடுத்து **‘பாரி’** இணைய இதழ் மீது ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இந்தியக் கிராமங்கள், அங்கிருக்கும் சவால்கள், பிரச்சினைகள் போன்றவை குறித்துத் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் எழுதி பிரபலமடைந்தவர் பத்திரிகையாளர் பி.சாய்நாத். விவசாயிகள் தற்கொலைகள் தொடர்பான அவரது கட்டுரைகள் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தன. தனது பணி ஓய்வுக்குப் பிறகு, ‘பீப்பிள்ஸ் ஆர்க்கைவ் ஆஃப் ரூரல் இந்தியா’ (பாரி) எனும் இணைய இதழை நடத்தி வருகிறார். அதில் கிராமங்களில் உள்ள சாதனையாளர்கள், கலைஞர்கள், அழிந்து வரும் கலைகள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எனப் பல விஷயங்களைப் பற்றி ஆழமான கட்டுரைகளும், ஆவணப்படங்களும் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

‘கலை, பண்பாடு என்ற பெயரில் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, அவர்களை அரசுக்கு எதிராக நிலைநிறுத்த **‘பாரி’** போன்ற ஊடகங்கள் முயற்சிக்கின்றன’ என்று குற்றம் சாட்டியிருக்கிறார் ராஜீவ் மல்ஹோத்ரா. இதன் மூலம் காவி அரசின் அடுத்த இலக்கு ‘பாரி’யா என்று அறிவுச் சமூகம் கொந்தளித்துக் கிடக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்



## கலைஞருக்கு காலை உணவு!

**1976**-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி, மொரப்பூர் சட்டமன்றத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர் அவர்கள் தருமபுரி மாவட்டத்துக்கு வருகை தந்தார். அப்போது வேட்பாளராக இருந்த ஆர்.பி.எம்.முருகன் அவர்களின் இல்லத்தில் உண வருந்திய தலைவர் கலைஞருக்கு, என் கையால் உணவு பரிமாறும் வாய்ப்பு கிடைத்தது. காலை உணவு என்பதால், இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றைப் பரிமாறினோம். உணவு நன்றாக இருப்பதாகக் கூறினார். அவருக்கு உணவு பரிமாறிய அந்தத் தருணத்தை இப்போது நினைத்தாலும் மனம் ஆனந்தமடைகிறது.



சேகர்

**-கோ.சேகர்,**
**தி.மு.கழக மாவட்டப் பிரதிநிதி,**
**பாப்பிரெட்டிப்பட்டி,**
**தருமபுரி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ‘நம்நாடு’ தலையங்கம்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பத்து நாட்களுக்கு முன், ‘நம்நாடு’ இதழ் வெற்றி தெரிகிறது என தலையங்கம் எழுதியது. ‘நல்ல தீர்ப்பளியுங்கள்’ எனும் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், “தமிழ் மக்களாகிய உங்களின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்குரிய அரிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. சிந்தித்து செயலாற்ற மறந்து விடுவீர்களானால், உங்களுக்கு நேர உள்ள கேடுகளைத் தடுத்துக் கொள்ள முடியாமல் வேண்டியவர்களாவீர்கள்” என எடுத்துச் சொன்னது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 264




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131